# 'பயமுறுத்தல்களுக்கு அரசாங்கம் பணியாது'

Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

மலர் 11

இதழ்: 299

தேசிய தினசரி

தபால் பெட்டி எண் 49

போன்: 389

யாழ்ப்பாணம் கார்த்திகை 24 றம்ழான் 28 செவ்வாய்க்கிழமை [9-12-69]

ஈழநாடு சந்தா

வாரப் பதிப்பு

மூன்று மாதம் ரூ. 4-00

ஆறு மாதம் ரூ. 7-50

ஒரு வருடம் — ரூ. 14-00

முற் பணம் கட்ட வேண்டும் தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

ஈழநாடு சந்தா

தினப் பதிப்பு

மூன்று மாதம் — ரூ. 18-00

ஆறு மாதம் — ரூ. 84-00

ஒருவருடம் — ரூ. 66-00

# பிரதமர் அறிவிப்பு

## 'ரயில் ஊழியர் கோரிக்கை வழங்கமுடியாது'

—போக்குவரத்து அமைச்சர்

கோட்டை, திங்கள்

**வேலைநிறுத்த பயமுறுத்தலை எதிர்நோக்க அரசாங்கம் எந்தநேரத்திலும் தயாராக இருப்பதாக பிரதமர் டட்லிசேனநாயகா இன்று மஹியங்கணையில் ஒரு கூட்டத்தில் பேசும்போது தெரிவித்தார்.**

வேலைநிறுத்தம்செய்துவரும் புகையிரதப்பகுதி காட்மார், என்ஜின் சாரதிகளுக்கு சம்பள உயர்வு வழங்கமுடியாதென போக்குவரத்து அமைச்சு இன்று உறுதியாகத் தெரிவித்தது. சம்பள நிர்ணயசபையின் சிபார்சுப்படி சகல அரசாங்க ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இவர்களுக்குசம்பளஉயர்வு வழங்கினால், ஏனைய அரசாங்க ஊழியர்களிலும்பார்க்க இவர்களின் சம்பளம் கூடிவிடுமென்றும் அப்படி அவர்களுக்கு விசேஷமாக வழங்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லையென்றும் அமைச்சின் அறிக்கை கூறுகிறது,

காட்மாருக்கும் என்ஜின் சாரதிகளுக்கும் போதிய அளவு சம்பளமும் மேலதிக வேலைக்கான வேதனமும் பட்டாவும் வழங்கப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டிய அமைச்சு அவர்களின் சம்பள விபரத்தையும் வெளியிட்டுள்ளது.

அமைச்சு வெளியிட்டுள்ள சம்பள விபரம் வருமாறு:

1-ம் தர புகைரயிரத சாரதிகளின் மாதச்சம்பளம் 670 ரூபா- மேலதிகவேலைக்கான கூடியவேதனம் 275 ரூபா. 2-ம் தர சாரதிக்கு வேதனம் 445 ரூபா - மேலதிகவேலைக்கான கூடிய வேதனம் 240 ரூபா.

1-ம் தர பாதுகாவலர் பெறும் வேதனம் 610 ரூபா- மேலதிகவேதனம் 250 ரூபா, 2-ம்தர பாதுகாவலர் பெறும்வேதனம் 440 ரூபா- மேலதிகவேதனம் 110 ரூபா. மூன்றும்தர பாதுகாவலர் வேதனம் 220 ரூபா- போயாதினவேதனம் உட்பட மேலதிகவேதனம் 165 ரூபா.

சம்பள நிர்ணயசபையின் சிபார்சின்படி அரசாங்க ஊழியருக்கு வழங்கப்பட்டுள்ள சகல படிகளும் இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது,

சம்பளநிர்ணய சபையின் சிபார்சை அரசாங்கம் அமுல்நடத்துவதற்கு 12 கோடி ரூபா 50 லட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அந்த அறிக்கை மேலும் கூறியுள்ளது.

## ராணுவம் அழைக்கப்படும்

ரயில் என்ஜின் சாரதிகள், பாதுகாவலர்களுடன் என்ஜின் உதவியாளர்களான பயர்மன்களும் வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்டால் அத்தியாவசியமான உணவுப் பொருட்களைக் கொண்டுசெல்வதற்கு ராணுவம் அழைக்கப்படும். ராணுவத்திடம் உணவுப் பொருட்களைத் தேவையான இடங்களுக்குக் கொண்டுசெல்லும் பொறுப்பு ஒப்படைக்கப்படும். லொறிகள் மூலம் இவைகள் கொண்டு செல்லப்படும்.

இப்போது என்ஜின் சாரதிகள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டபோதிலும் உணவுப் பொருட்களைக் கொண்டு செல்லும் சரக்குவண்டிகளை பயர்மன்கள் இயக்கி சேவையில் ஈடுபடுத்துகிறார்கள்.

இன்று பிரயாணிகள் ரயில்சேவை ஒன்றும் நடைபெறவில்லை.

### 12 சரக்கு வண்டிகள்

இன்று கொழும்பிலிருந்து 12 சரக்குவண்டிகள் அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் சரக்கு...

# அத்தியாவசிய பொருள் இறக்குமதியும் வேலை நிறுத்தங்களும் அரசியலா?

## அமெரிக்காவில் 'ஜாக்கி'க்கு கிராக்கி

நியூயோர்க், டிச. 7

அமெரிக்காவில் திருமணமாகாத ஆண்கள் மத்தியில் புதிதாக விற்பனைக்கு வந்துள்ள திருமதி ஜாக்கியூலின் பாவைகளுக்குப் பெருத்த கிராக்கி ஏற்பட்டுள்ளது. இந்தப் பாவைகள் நிஜ 'ஜாக்கி' போன்று அவர் அளவுக்கே தயாரிக்கப்பட்டுள்ளன.

நியூயார்க்கிலிருந்து கிடைத்த அறிக்கையொன்றின்படி மேற்படி தகவல் தெரியவந்துள்ளது.

இதுவரை 50 ஆயிரம் 'ஜாக்கி' பாவைகள் விற்பனையாகிவிட்டதாக இந்தப் பாவைகளைத் தயாரித்த கம்பனிச் சொந்தக்காரரான திரு. அலெக்சாண்டர் கோகென் தெரிவிக்கிறார்.

ஏராளமானவர்கள் 'ஜாக்கி' பாவை கோரி, ஓடர்கள் அனுப்பியிருக்கின்றார்கள். அவர்களில் அதிகமானோர் தனித்து வாழும் பிரமச்சாரிகள் என்று தகவல் தருகிறார் திரு. அலெக்சாண்டர்.

ஜாக்கி பாவையின் உயரம் 5 அடி 2 அங்குலம்.

## அரசியல் வட்டாரங்களில் அடிபடும் அபிப்பிராயம்

கோட்டை, திங்கள்

மோட்டார் வாகனங்களின் உதிரிப்பாகங்கள் மற்றும் நாட்டுக்குத்தேவையான அத்தியாவசியப்பொருட்கள்பலவற்றையும் அரசாங்கம் இறக்குமதி செய்ய விருப்பதாகவும் அடுத்த தேர்தல்காலத்துக்கு முன்னர் நாட்டில் எந்தப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு இல்லாமல் செய்ய வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நோக்கமென்றும் அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது.

இந்தப் போகத்தில் பற்றாக்குறையாகவுள்ள சின்ன வெங்காயத் தட்டுப்பாட்டை நீக்குவதற்காக கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபனம் இந்தியாவிலிருந்து சின்ன வெங்காயம் இறக்குமதி செய்ய விருப்பதையும் இதுவரை இந்தியாவிலிருந்து இறக்கு...மிளகாய் சீனவிடமிருந்து இறக்குமதிசெய்ய விருப்பதையும் அரசியல் வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இதேசமயம் வேலை நிறுத்தங்கள் பரவுவதும் துறைமுகத்தொழிலாளர் வேலைநிறுத்தம் செய்ய உத்தேசித்திருப்பதும் அரசாங்கத்தின் திட்டத்தை முறியடிக்கும் நோக்கம் உடையதுதானென்றும் அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது

## இராணுவ டிரக்குகளில் ஜிசிஈ சாதாரணவிைடத்தாள்

நல்லூர், திங்கள்

இம்மாதம்14ந்திகதிஆரம்பமாகும் ஜி சி ஈ [சாதாரணம்]பரீட்சையின் விடைத்தாள்கள் இராணுவ டிரக்கு... நாட்டிலுள்ள 2200 பா...சை நிலையங்களுக்கும் கொண்டுசெல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கல்விப்பகுதி அதிகாரி ஒருவர் அவர்தெரிவித்தார்.

ஒவ்வொரு ராணுவ டிரக்கு...லும் 250 விடைத்தாள்...றும் ஆயுதந்தாங்கிய இராணுவத்தினர் பாதுகாப்பாக செல்வார்களென்று மேலும் தெரிவித்தார்.

இராணுவ டிரக்குகளுக்குப் பின்னர் கல்விப்பகுதியைச்சேர்ந்த உயர் அதிகாரிகள் செல்வார்களென்றும் அவர் கூறினார்.

ஜி சி ஈ [சாதாரணம்] பரீட்சைக்கு நாடு முழுவதிலும் இம்முறை 3 லட்சம் மாணவர்கள் தோற்றுகிறார்கள்.

## 10,000 பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பளிக்கத் திட்டம்

கோட்டை, திங்கள்

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பளிக்கத் திட்டம் அமைச்சு... திரட்டிக் கொடுப்பது கூட்டுஸ்தாபனங்களிலும் தனியார் துறைகளிலும் வேலை...

## அனுராதபுரத்திற்கு 10 விசேஷ பஸ் சேவை

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணத்திலிருந்து அநுராதபுரத்திற்குநேற்று 10 விசேஷ பஸ்சேவைகள் நடத்தப்பட்டன. இன்றும் 10 விசேஷ பஸ் சேவைகள் யாழ்ப்பாணத்திலிருந்து அனுராதபுரத்திற்கு நடைபெறும். அனுராதபுரத்திலிருந்து... அதிகரிக்கப்பட்டுள்ளது. பஸ் ஊழியர்கள் பூரண ஒத்துழைப்பு தருகின்றார்கள்.

## நிலம் பெறுவதை தடை செய்யவும்

கோட்டை, திங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10,000 பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பளிக்கத் திட்டம்

கோட்டை, திங்கள்

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பளிக்கத் திட்ட அமைச்சு திட்டமொன்றைத் தயாரித்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் 10000 பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பளிக்கப்படுமெனக் கூறப்படுகிது.

இப்பட்டதாரிகளுக்கு ஆசிரியப்பதவிகள் மாவட்ட நிர்வாகத்தைச் சீர்திருத்திக்கொடுப்பது சமூகசேவை பொருளாதார திட்ட அமைச்சுக்குப் புள்ளி விபரங்களைத் திரட்டிக் கொடுப்பது கூட்டுஸ்தாபனங்களிலும் தனியார் துறைகளிலும் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க திட்ட அமைச்சு தீர்மானித் ள்ளது.

மேலும் பட்டதாரிகள் வேலைவாய் புக்காக நியமிக்கப்பட்டகுழு இப்பட்டதாரிகள் சுயமாக வர்த்தகம், கைத்தொழில், வியாபாரம் ஆகியவைகளில் ஈடுபடவும் வாய்ப்பளிக்கத் திட்டமிட்டுள்ளது.

## வீதியில் கிடந்தவர் யார்? ஆஸ்பத்திரியில் அனுமதிப்பு

பூநகரி, திங்கள்

இரத்தக காயங்களுடன் வீதியில் காணப்பட்ட ஒருவரை அவ்வழியால் வந்து கொண்டிருந்த இ. போ. ச. பஸ்ஸில் பிரயாணம் செய்தவர்கள் இன்று மாலை பூநகரி ஆஸ்பத்திரியில் அனுமதித்தனர். பூநகரியிலிருந்து 6 மைல்களுக்கு அப்பால் மன்னார் வீதியில் அறிவிழந்த நிலையில் அவர் காணப்பட்டார்.

சுமார் 45 வயதுமதிக்கத்தக்க இதர் இன்னும் அடையாளம் காணப்படவில்லை இன்னும் அறிவிழந்த நிலையிலேயே அவர் இருப்பதால் வாக்குமூலம் பதிவுசெய்யப்படவில்லை. பொலிசார்புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

## காந்திஜியின் பேத்தி மரணம்

புதுடில்லி, டிச. 8

மகாத்மா காந்திஜியின் ஒரு பேத்தியான செல்வி மனு காந்தி இன்று அதிகாலை புதுடில்லியில் காலமானார். சிறிது காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த மனு காந்திக்கு வயது 41. காந்திஜியுடன் நவகாளி யாத்திரையில் சென்றிருந்த மனு காந்திஜியின் இறுதிக்காலத்திலும் அவருடனேயே இருந்தார். காந்திஜியின் கடைசிக்கால நிகழ்ச்சிகள் பற்றி இவர் தமது டயறியில் குறித்துவைத்திருக்கிறாராம்.

... பாட்டை நீக்குவதற்காக கூட்டுறவு மொத்தவிற்பனவு ஸ்தாபனம் இந்தியாவிலிருந்து சின்ன வெங்காயம் இறக்குமதி செய்ய விருப்பதையும் இதுவரை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட செத்தல் ...

... பாடசை நிலையங்களுக்கும் கொண்டுசெல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கல்விப்பகுதி அதிகாரி ஒருவர் அவர்தெரிவித்தார்.

ஒவ்வொரு ராணுவ டிரக்கு[illegible]லும் 250 வினாத்தாள் கட்டுகள்அனுப்பப்படுமென் ...

## "தீவுப்பகுதி ஆசிரியர் பற்றுக்குறையை நீக்குக" கல்வி அமைச்சரைக் கோருவர்

மாவிட்டபுரம், திங்கள்

தீவுப்பகுதியில் நிலவிவரும் ஆசிரியர் பற்றுக்குறையை அடுத்த ஆண்டு முற்பகுதியில் நிரப்பித்தருக என்று கல்வி அமைச்சரைக் கோருவதென தீவுப்பகுதி தமிழாசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது

புங்குடுதீவு ஸ்ரீகணேசா வித்தியாசாலையில் பண்டிதர் வீ. வ. நல்லதம்பி தலைமையில் நடைபெற்ற மேற்படி சங்கக்கூட்டத்தில் நிறை வேறிய மற்றும் தீர்மானங்கள் வருமாறு:-

அண்மையில் நடந்தேறிய ஆசிரியர் பதவி உயர்ச்சி நேர்முகப் பரீட்சையின் பெறுபேற்றை மிகவிரைவில் வெளியிடுவதுடன் நியமனத்தை 1970-ம் ஆண்டு தை மாதத்தில் வழங்கும்படியும் தமிழாசிரியர்களின் தொகைக்கேற்ப நியாயமான அளவு மூன்றும் தர இரண்டாந்தர அதிபர்பதவிகளையும் விசேட ஆசிரியர் பதவிகளையும் வழங்குதல் வேண்டும் எனக்கோருதல்

தீவுப்பகுதி த. ஆ. சங்கம் நடத்திய 3-ம், 4-ம் தரப் பரீட்சை பெறுபேற்றினை 15-12-69-க்கு முன் வெளியிடுவதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

## 10-ம் திகதி முடிவுகள்

மாவிட்டபுரம், திங்.

வலி. வடக்கு தமிழாசிரியர் சங்க கிளையினரால் நடத்தப்பட்ட 3-ம், 4-ம் தர பரீட்சைகளின் முடிவுகள் இம்மாதம் 10-ம் திகதி வெளியாகஇருக்கிறது.

## ஆறு கப்பல்களில் ரசாயன உரம் வந்துள்ளது

கோட்டை, திங்கள்

விவசாயிகள் நெல்விளைச்சலை அதிகரிப்பதற்கு அதிக அளவில் ரசாயன உரம் பாவிப்பதால் அடுத்த மகா போகத்துக்கு வேண்டிய உரவகைகளை அரசாங்கம் இறக்குமதி செய்திருக்கிறது என்று உணவு விவசாய அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்தார்

இப்போது ஆறுகப்பல்கள் ரசாயன உரவகைகளுடன் கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ளதாகவும் இவற்றில் மூன்று கப்பல்களிலிருந்து உரவகைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் மிகுதி வேலைகள் நடைபெறுமென்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்படும் உரவகைகள் உரியகாலத்தில் நாட்டின் பலபகுதிகளிலுமுள்ள விவசாயிகளுக்கு போய்ச் சேராவிட்டால் அவற்றினால் பயனில்லையென்றும் அவர் சொன்னார். உரம் உரிய சமயங்களில் இதர இடங்களுக்குப் போய்ச் சேராவிட்டால் நெல்விளைச்சலின் குறியீடடை அடையமுடியாமல் போகுமென்றும் அவர் கூறினார்,

... திக்கு சேர்ந்த உயர்[illegible] அதிகாரிகள் சேல்வார்களென்றும் அவர் கூறினார்.

ஜி சி ஈ [சாதாரணம்] பரீட்சைக்கு நாடு முழுவதிலும் இம்முறை 3 லட்சம் மாணவர்கள் தோற்று[illegible]கள். கல்விஉதவிக்கமிஷனர் கல்வி அதிகாரிகளுடன் நேற்றுஇப் பரீட்சைசம்பந்தமாகபேச்சுவார்த்தை நடத்தினர்.

## 'ஒருவருமே இன்னும் வேலைக்குதிரும்பவில்லை'

மாவிட்டபுரம், திங்கள்

''வேலைநிறுத்தம் செய்யும் புகையிரத பாதுகாவலர்கள், சாரதிகளில்ஒருவருமே இன்னும் வேலைக்கு திரும்பவில்லை. வேலைக்கு சிலர் திரும்பியதாகக் கூறப்படும் செய்தியில் உண்மையில்லை'' என்று புகையிரத் பாதுகாவலர் சங்க பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இதுபற்றி ஒரு பாதுகாவலர் தெரிவிக்கையில் கூறியதாவது: தினமும் 800 ரயில்கள் சேவையில் ஈடுபட்டிருந்தன. இன்று ரயில் சேவை ஸ்தம்பித்ததால் நஷ்டமாகப்போகும் லட்சக்கணக்கான ரூபாய் 9, 10 வருடங்களுக்கு எமக்கு அலவன்சாக வழங்க போதுமானது எமது ஊழியர் விகிதாசாரப்படி ஒருவருடத்துக்கு 3 லட்சம் ரூபாவே அலவன்சாக வழங்க நேரிடும்'' என்று தெரிவித்தார்.

தற்போது 660 காட்மார்களும், 282 சாரதிகளும், 50 பயிற்சிச் சாரதிகளும் வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர். இவர்களில் சிலர் வேலைக்கு திரும்பினார்கள் என்று வெளியான செய்தி பொய்'' என்று அவர் மறுத்தார்.

''வேலைநிறுத்தத்தால் பிரதம முகாமையாளர் உட்பட போட்டர்கள் வரை எவரும் வேலையில்லாமல் இருக்கின்றனர். பென்சன் பெற்று இளைப்பாறிய 20 சாரதிகளே தற்போது ரயில் சேவையை நடத்த அழைக்கப்பட்டுள்ளனர்'' என்று தெரிவிக்கப்பட்டது.

... ரயில் சேவை ஒன்றும் நடைபெறவில்லை.

### 12 சரக்கு வண்டிகள்

இன்று கொழும்பிலிருந்து 12 சரக்குவண்டிகள் அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் சரக்கு வண்டிகளையும் ஏற்றிக் கொண்டு நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்றன.

10 விசேஷ பஸ்சேவைகள் நடத்தப்பட்டன. இன்றும் 10 விசேஷ பஸ் சேவைகள் யாழ்ப்பாணத்திலிருந்து அனுராதபுரத்திற்கு நடைபெறும். அனுராதபுரத்திலிருந்து கொழும்புக்கு உடனுக்குடன் தொடர்பான சேவைகள் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கை போக்குவரத்துசபை யாழ்ப்பாண டிப்போ அதிகாரி ஒருவர் நேற்றிரவு நமது நிருபரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது; புகையிரதசேவை ஸ்தம்பித்ததைத் தொடர்ந்து பஸ் பிரயாணிகள் வழக்கத்திலும் பார்க்க இருமடங்காக அதிகரித்துள்ளனர். ஒவ்வொரு பாதையிலும் பஸ்சேவை அதிகரிக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு தினமும் விசேஷ பஸ்சேவைகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளன அப்படியிருந்தும் பலர் பிரயாணத்தை மேற்கொள்ள முடியாமலிருக்கிறது, காலை முதல் மாலை வரை நீண்ட கியூவில் நின்று ஆசனங்கள் பதிவுசெய்யப்படுகின்றன.

மட்டக்களப்பிற்கும் யாழ்ப்பாணத்திலிருந்து 2 விசேஷ சேவைகள் விடப்பட்டுள்ளன. மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு கொடிகாமம் சேவைகளும் ...கள்

## நிலம் பெறுவதை தடை செய்யவும்

கோட்டை, திங்கள்

இலங்கையரல்லாதவர்கள் இந்நாட்டில் நிலம் வாங்குவதைக் கடும் சட்ட நடவடிக்கைகளின் மூலம் தடை செய்யவேண்டுமென அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் அரசியல் கட்சிகளைக் கோரியுள்ளது.

பௌத்த காங்கிரஸ் அரசியல் கட்சிகளுக்கு விடுத்த கோரிக்கைகளில் சட்ட விரோதமாகக் குடியேறுபவர்களைக் காட்டிக்கொடுப்பவர்களுக்கு அரசாங்கம் சன்மானம் வழங்கவேண்டுமெனவும் பிரஜா உரிமை வழங்கும்போது பிரஜா உரிமை பெறுபவர்கள் சிங்களம், சிங்களகலாச்சாரம் ஆகியவற்றில் தேர்ச்சியுடையவர்களாகவிருக்கவேண்டுமென அரசாங்கம் வற்புறுத்தவேண்டும் எனவும் கோரப்பட்டிருந்தது.

## மூழ்கி மரணம்

மல்லாகம், திங்கள்

அச்சுவேலிப் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த ஒட்டகப்புலம் கிராமத்தில் பேகுருசுமுத்து(வயது 40) என்பவர் தவறுதலாககிணற்றில் வீழ்ந்து மூச்சுத்திணறி பரிதாபகரமாக மரணமானசம்பவம் இடம் பெற்றுள்ளது.

யாழ். தபால் நிலைய

## புதிய பரிவர்த்தனை திறப்பு விழா: பொறியியல் பகுதிபகிஷ்கரிக்கும்

— நமது அலுவலக நிருபர் —

யாழ்ப்பாணம், செவ்

யாழ்ப்பாணம் தபால் கந்தோரில் உள்ள புதிய நான்கு பரிவர்த்தனையை தபால் மா அதிபர் இம் மாதம் 10ம் தேதி திறந்து வைகநம் போது, பொறியியலாளர் பகுதியினர் இவ் வைபவத்தை பகிஷ்கரிப்பர்கள் என பொறியியலாளர் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வைபவத்தைதபாற் கந்தோர் பகுதியினரும், பொறியியலாளர் பகுதியினரும் சேர்ந்து செய்யும்படி தபால்மா அதிபர்தெரிவித்ததகவும், இதற்கு தபாற்கந்தோர் பகுதியினர் சம்மதிக்கவில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்தார் இவ் வைபவம் பற்றி இரு பகுதியினரும் நேற்றுவரை எவ்விதஒழுங்கும் செய்யவில்லை.

பரிவர்த்தனை திறப்புவிழாவில் பொறியியலாளா பகுதியினர் வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டிருப்பதாகவும் இவ்வைபவத்திற்கு தாங்கள் அழைக்கப்படவில்லை. இதனைபகிஷ்கரிக்கப் போவதாகவும் பொறியியளாளர் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திறப்புவிழாவைபவத்தில் பொறியியளாளர் பகுதியினர் புறக்கணிக்கப்பட்டிருப்பது பற்றி தொலைதொடர்பு பரிசோதகர் சங்கம் தபால் மாஅதிபருக்கு ஆட்சேபித்துள்ளது இதனைத் தொடர்ந்து தபால் மா அதிபர் திருவேர்ணன் அபயசேகரா, பொறியியளாளர் பகுதியினர் புறக்கணிக்கப்பட்டிருப்பதற்கான காரணத்தை அறிய முற்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

## ப ச தேர்தலை பகிஷ்கரித்தனர்

மாவிட்டபுரம், திங்கள்

நேற்று முன்தினம் நடைபெற்ற காங்கேசன்துறை பட்டின சபைத் தேர்தலை 4-ம், 5-ம் வட்டார ஊறணி வாக்காளர்கள் பகிஷ்கரித்தனர்.

1952ம் ஆண்டுமுதல் ஊறணிக்குத் தனிவட்டாரம் கோரி அதை உள்ளூராட்சி அமைச்சு அங்கீகரித்திருந்தபோதிலும் நடைமுறைப் படுத்தாத காரணத்தைமுன் வைத்தே தேர்தலை பகிஷ்கரித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

## 'பயர்மன்'களும் வேலை நிறுத்தம் செய்வர்?

யாழ்ப்பாணம்செவ்

வேலைநிறுத்தம் செய்து வரும்ரயில்வே என்ஜின் சாரதிகள் பாதுகாவலர்களுடன் என்ஜின் உதவியாளர்களும்(பயர்மன்)வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளபபட்டுள்ளன.பயர்மன் சங்கமும் வேலைநிறுத்தமுடிவுஎடுப்பது சம்பந்தமாக அவசரமாகக் கூடி ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

என்ஜின்சாரதிகள் வேலைநிறுத்தத்தை மேற்கொண்டபோதிலும், சில ரயில்களை பயர்மன்களின் உதவியைக் கொண்டு இயக்கி சேவையிலீடுபடச் செய்ததைத் தொடர்ந்தே இவர்களையும் வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்வதற்கான தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்வதாககூறப்படுகிறது

இதனால் இப்போது அரைகுறையாகச் சேவை செய்து வரும் சரக்கு வண்டிகளின் சேவை கூட முற்றாக பாதிக்கப்பட்டுவிடுமென கருதப்படுகிறது.

சுருட்டுத்தொழிலாளரின்

## ஆர்ப்பாட்ட ஊர்வலமும் கூட்டமும் நாளைநடைபெறும்

யாழ்ப்பாணம், செவ்.

வேலைநிறுத்தம்செய்து வரும் சுருட்டுத்தொழிலாளருகக ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்ட ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நாளை கோண் ாவிலில் நடைபெறவிருப்பதாக அகிலஇலங்கை ஐக்கிய சுருட்டுத்தொழிலாளர்சங்க தலைவர் திரு, ஆ துரைராஜசிங்கம் தெரிவித்தார்;

தற்போது வேநிறுத்தத்தில் இறங்கியுள்ள புகையிரதப் பாதுகாவலர் சங்கம், சாரதிகள் சங்கம் ஆகியன இயந்திர உதவியாளர் சங்கத்தை இணைத்து அவர்களையும் வேலைநிறுத்தத்தில் குதிக்கச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருதாக அறியப்படுகிறது,

(மாவி. நிருபர்)

இன்று உடும்பராயிலும் வேலைநிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்து ஒரு கூட்டம் நடைபெறுமென்றும் இன்னும் 5000 சுருட்டுத் தொழிலாளர் வேலைநிறுத்தம்செய்துவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சம்பளஉயர்வு வழங்கப்படாத இடங்களில் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாகவும், 151 சுருட்டு முதலாளிகள் இதுவரை சம்பளஉயர்வு வழங்க சம்மதித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தாவடி, கொக்குவில், வசாவிளான், ஏழாலை, குரும்பசிட்டி புலோலிஆகிய இடங்களில் வேலைநிறுத்தத்தை ஆதரித்து கூட்டங்கள் நடைபெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

சிறு தொகை பிணைப் பணத்துடன் புதிய விதமான ஓவிய வேலைகள் பழகுவதற்கு ஆர்வமுள்ள இளைஞர்கள் தேவை. திறமைக்கேற்ற சம்பளமுண்டு. சுரன் ஆட்ஸ், 72/3, கஸ்தூரியார்வீதி. யாழ்ப்பாணம். 1612

யாழ்ப்பாணம் கோட்டை முனீஸ்வரன் தேவஸ்தானத்துக்கு அர்ச்சகர் தேவை. வீரசைவராக இருக்கவேண்டும். இதற்கு முன் சேவை செய்த தேவஸ்தானத்தின் நற்சான்றிதழுடன் தேவஸ்தானத்தில் நேரில் வரவும். 1599

சித்திரத்தில் ஆர்வமுள்ள பெண்கள் தேவை. பயிற்சியுடன் ஊதியம் வழங்கப்படும். பயிற்சி பெற்ற பின் நாள் சம்பளம். மாநகர சபை எல்லைக்குள் இருப்பவர் விரும்பத்தக்கது விண்ணப்ப முடிவு திகதி 20-12-1969. புளோட்டேஸ், 37—39, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1598

வளர்ந்த உயர் ரக நாய் தேவை. வயது, பால், நிறம், விலை முதலியவற்றை அறியத்தரதரவும். ந சதாசிவம், நவாலி தெற்கு, மானிப்பாய். 1597

வெளிநாட்டு கைத்தொழில் சாலைக்கு ஆங்கிலம் உட்பட ஜி. சி. ஈ. தராதரம் ஒரு வருட பயிற்சியும் ஐந்து வருட சேவையும். விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம்: 1595, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 1595

ஆசிரியை:

பட்டம் பெற்ற சங்கீத ஆசிரியை தேவை. விபரங்களுடன் விண்ணப்பிக்குக. என். நடராசா, வட்டுக்கோட்டை. 1613

### விற்பனைக்கு

EN 81 BSA (Bantam) நல்ல உன்னத நிலையில் விற்பனைக்கு உண்டு. ஜெயராம் அன்ட் கொம்பனி, ''றதி பில்டிங்'' 91/4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1600

கார்:

மிகவும் நல்ல நிலையில் சொந்தப் பாவிப்பிலுள்ள EN கடைசித் தொடர்பி

## அறிவித்தல்

யாழ்ப்பாணம் கோட்டை முனீஸ்வரன் தேவஸ்தானத்தில் அர்ச்சகராகப் பணியாற்றிய திரு. க. இரத்தின சபாபதி 6-12-69ல் இருந்து விலகிவிட்டார். அவருக்கும் முனீஸ்வரன் தேவஸ்தான பணிகளுக்கும் எவ்வித தொடர்புமில்லை என்பதை அறியத் தருகின்றோம்

அதிபர்.
1460

## நன்றி நவிலல்

மணமக்களின் பெற்றோரும், யாழ்ப்பாணம் திருஞானஸ் அன்கோ. ஓடிற்றேஸ், வருமானவரி ஆலோசனையாளர்களும் டாக்டர் வெ. திருஞான சம்பந்தரும் திருமதி திருஞானசம்பந்தரும், தங்களுடைய திருமணம் நல்லூர் சிவன்கோவிலில் நடைபெற்ற பொழுதும் பின்பு வீட்டிற்கும் சமூகம் தந்தவர்களுக்கும் அன்பளிப்பு செய்தவர்களுக்கும் ஆசீர்வாதம் செய்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றார்கள். 1611

## 8-வது தடவையாக தலைவரானார்

ஊர்காவற்றுறை, திங்கள்

தீவுப்பகுதி முன்னேற்றம் கூட்டுறவில் பெரிதும் தங்கியுள்ளது. இன, மத வேறுபாடு இன்றி நாம் தொண்டாற்றுவதற்கு கூட்டுறவே பெரிதும் பயன்படவேண்டும். தீவகத்தைப் பொன்கொழிக்கும்நாடாக்க நாம் முயலவேண்டும்.''

புங்குடுதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் நடைபெற்றபோது எட்டாவது முறையாகவும் தலைவராகத் தெரியுதெய்யப்பட்ட வழக்கறிஞர் திரு. ப. கதிரவேலு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் இக்கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு ப. கதிரவேலு (வழக்கறிஞர்) உபதலைவர் திரு' இ. தம்பு காரியதரிசி திரு. இ. குலசேகரம் (ஆசிரியர்)

நிர்வாகசபை அங்கத்தவர்களாக திரு. க. பொன்னம்பலம், திரு அ. மனுவற்பிள்ளை. திரு. ஞா. மனவல், திரு. சு. கருணாகரன், திரு. க. ஐயாத்துரை ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்,

## மூதூர் இரு காரியாதிகாரி

## விநாயகர் வெற்றி

சுழிபுரம், திங்கள்

தொல்புரம் விநாயகர் விளையாட்டுக் கோஷ்டிக்கும், வழக்கம்பரை கண்ணாகோஷ்டிக்கும் வழக்கம்பரை விளையாட்டுமைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில், தொல்புரம் விநாயகர்கோஷ்டியினர் ஒரு கோல்போட்டு வெற்றிபெற்றனர். திரு. ஆ. பத்மநாதன் மத்தியஸ்தராககடமையாற்றினார்.

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

மாவிட்டபுரம், திங்கள்

யாழ் அரசாங்க ஊழியர் விளையாட்டுச்சங்கம் வருடாவருடம் நடத்தும் உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டி இம் மாதம் நடுப்பகுதியில் நடைபெற உள்ளது.

இதற்கான மனுப்பத்திரங்கள் விரைவில் கோரப்படுமென்றும், இம்முறை முன்னையதிலும்பட அதிகமான அரசாங்க இலாகாக்கள் கலந்து கொள்ள இருப்பதாகவும் அமைப்பாளர் திரு இ க குமரையா தெரிவித்தார்.

## கரபந்தாட்டம்

திருகோணமலை, திங்கள்

கந்தளாய் சீனித்தொழிற்சாலை பயனியர் கோஷ்டிக்கும் திருமலை ஸ்டார் விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் பயனியர் இரு ஆட்டங்களிலும் வெற்றிபெற்று ஸ்டார் கழகத்தைத் தோற்கடித்தது.

## மாணவர்சங்க ஆண்டு விழா

யாழ்ப்பாணம், செவ்

மன்னார் புனிதசவேரியார் கல்லூரி பழைய மாணவர் சங்கம் தனது ஆண்டு விழாவை அண்மையில் கொண்டாடியது. மன்னார் எம். பி. திரு. வி ஏ அழகக்கோன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இவ்விழாவில் விளையாட்டுப் போட்டி, கலை கதம்பநிகழ்ச்சிகள் இடம் பெற்றன. வெற்றிபெற்றோருக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.


## வெஸ்லி சினிமா

மானிப்பாய்

தினசரி: 6-30,9-30

ரிபோயா,போயா 2-30மணி

சிவாஜி - கே. ஆர் விஜயா

நடித்த


# யாழ். தெரிவுகோஷ்டி வெற்றி

## ஸ்கந்தாவுடன் நடந்த உதைபந்தாட்ட மோதல்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ். தலைவர் தெரிவுக் கோஷ்டிக்கும் யாழ். பாடசாலை விளையாட்டுச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கூட்டுச் சாம்பியனாக தெரிவு செய்யப்பட்ட சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். தலைவர் கோஷ்டி வெற்றி பெற்றது.

இப்போட்டி ஆரம்பமாகி 8 நிமிடங்களின் பின் யாழ். தலைவர் கோஷ்டியின் முன்னணி வீரர் அகஸ்ரின் முதலாவது கோலைப் போட்டார், இதையடுத்து ஸ்கந்தாக் கோஷ்டியினரும் திறமையாக விளையாடி ஒரு கோலைப்போட்டனர். இடைவேளையின் போது யாழ். தலைவர் கோஷ்டியினர் 2—1 கோல்களைப் பெற்றுவிட்டனர்.

இடைவேளையின் பின் ஆட்டம் மிகவும் ரசிப்பாகக் காணப்பட்டது. ஸ்கந்தாக் கோஷ்டியினரும், யாழ் கோஷ்டினரின் பலமான தாக்குதல்களுக்கு சளைக்காமல் எதிர்த்தாக்குதல் கொடுத்த வண்ணமேயிருந்தனர். ஆட்டம் முடிவடைவதற்கு 10 நிமிடங்கள் இருக்கும்போது யாழ். தலைவர் கோஷ்டியின் வலதுகரைவீரர் மணி மூன்றுவது கோலைப் போட்டார். ஆட்டம் முடிவடையும் போது யாழ். தலைவர் கோஷ்டி 3—1 கோல்களால் வெற்றி பெற்றனர்.

இப் போட்டிக்கு திரு. ராஜேந்திரா மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

தே நி)

## வீடுடைத்து திருட்டு

மல்லாகம், திங்கள்

காங்கேசன் துறைப் பொலிஸ் நிலையத்தில் கொல்லங்கலட்டியைச் சேர்ந்த ஆர்.தேவநாயகிஎன்றபெண்மணி செய்துள்ள புகாரில் தனது வீடு உடைக்கப்பட்டு இனந் தெரியாத நபர்கள் ரூபா 800 பெறுமதியான தங்க நகைகளை திருடியுள்ளதாக தெரிவித்துள்ளார். இம் மாதம் 2ம் திகதிஇரவு நிகழ்ந்துள்ள இக்களவு சம்பந்தமாக பொலிசார் விசாரணை நடாத்துகின்றனர். இதுவரை எவரும் கைதாகவில்லை. ......

## களை பிடுங்கினர்

பளை, திங்கள்

போக்கறுப்பு அரசினர் தமிழ் கலவன் வித்தியாலய மாணவர்கள் பாக்கறுப்பு கிராமத்தில் உள்ள கமங்களில் களை பிடுங்கினர், மாணவர்களுக்கு மதிய போசனத்தை விவசாயிகள் வழங்கினர். ஆசிரியர்கள் திரு மு. அரியரத்தினம், திரு. ஆ. போம்பலம் தலைமையில் இக்களை பிடுங்கல் நடைபெற்றது.

# இன்றைய பலன்

### சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

கார்த்திகை மாதம் 24-ம் திகதி (9-12-69)

மேஷம்- பகைமூட்டம் வட்டமிடும் வீணான வார்த்தைகளால் மனம் புண்படும் தொழில்துறையில் முட்டுக் கட்டைகள் தோன்றக்கூடும். கடிதமொன்று கவலையைத் தரலாம். மனத்திடம் வேண்டும்.

ரிஷிபம்- கருத்தொருமித்த காதலர் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சி இடம்பெறும். எதிர்ப்புகள் மறைந்து எதிலும் சாதகமான சூழ்நிலை உருவாகும். கண்ணியமும் சேரும் கௌரவம் உயரும்.

மிதுனம்- சிந்தையில் குழப்பநிலை தோன்றக்கூடும். மனைவியின் உடல்நிலை சிறிது கவலையைத் கரலாம் செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும். சிலர் கடன் படவும் நேரிடலாம். தெய்வ நம்பிக்கை நன்று.

கடகம்- பாக்கியவிருத்தியுடன் பரம்பொருளின் அருளும் கிடைக்கும். தக்க சமயத்தில் உதவுவதற்குத் தந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டினசபை

## கூட்டத்தில் கைகலப்பு

சாவகச்சேரி திங்கள்

சாவகச்சேரி பட்டினசபையின் மாதாந்தக் கூட்டத்தில் 3ம் தரதொழில்ப்பகுதி சுப்பிரின்டன் ஒருவரை நியமிப்பது சம்பந்தமாக நடைபெற்ற விவாதத்தின்போது இரு அங்கத்தவர்களுக்கிடையில் வாக்குவாதம் காரசாரமாகிக் கைகலப்பில் முடிந்தது

சபையின் 9-ம் வட்டார அங்கத்தவருக்கும் 5 ம் வட்டார அங்கத்தவருக்குமிடையில் நடைபெற்ற இக் கைகலப்பினால் கூட்டத்தைச் சபைத் தலைவர் திரு கனகரத்தினம் சிறிதுநேரம் ஒத்தி வைத்தார்.

பின்னர்தொடர்ந்துநடைபெற்றகூட்டத்தில் தொழில் சுப்பிரின்டன் ஒருவர்தேவை என்ற பிரேரணைக்கு முதலில் ஆதரவளித்த சபைத் தலைவர் இறுதியில் அப்பிரேரணையை எதிர்த்து வாக்களித்தார்.

## 'இப்படிச் செய்கிறார்கள்'

திருக்கோணமலை, திங்கள்

திருமலைசரக்கு இறக்குமதி ஏற்றுமதி கூட்டுத்தாபனத்தில்கடமையாற்றும்ஊழியர்கள் அரசாங்க நிபந்தனையின்படி 55 வயதுக்கு மேற்பட்டவர்கள் வேலை செய்ய முடியாதபோது பல ஊழியர்கள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை மறைத்துக் கொண்டு அதற்குப்பதிலாக ஜே.பி. புறக்டர் ஆகியவர்களிடமிருந்து சத்தியக்கடுதாசி பெற்றுக் கொண்டு வந்து ஒப்புவிக்கிறார்கள், என்றும் இதனால் ஊழியர்களுடைய உண்மையான வயதைத் தெரிந்து கொள்ள முடியவில்லையென்றும் சம்பந்தப்பட்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## திருட்டு

மல்லாகம், திங்கள்

ஏழாலை முருகமூர்த்தி கோவில் உடைக்கப்பட்டுச் சுமார் 2000 ரூபா பெறுமதியான ஆலயத்திற்குச் சொந்தமான பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாகச் சுன்னாகம் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. குத்துவிளக்குகள்தட்டங்கள் போன்றன களிவுபோன

# "சைவம்காத்த சமயகுரவர் நாவலர்"

### — தம்பிரான் சுவாமிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

''சமயகுரவர்கள் பிறசமயங்களிடமிருந்து சைவத்தைக் காத்ததுபோலவே நாவலர் பெருமானும் காத்தார். சமயகுரவர் வாழ்வில் இறைவன் கைகொடுத்துச் சைவத்தைக் காத்ததுபோல நாவலர் பெருமானுக்குப் பொருட்தட்டுப்பாடு ஏற்பட்ட பொழுது இறைவனை நோக்கிப் பாடினார். கொழும்பிலிருந்து நன்னித்தம்பி முதலியாரின் உதவி உடனடியாகக் கிட்டியது. இதிலிருந்து நாவலர் பெருமானை நமது ஐந்தாங் குரவர் எனக் கூறுவதில் தவறேயில்லை''

மேற்கண்டவாறு சைவ பரிபாலனசபை, நாவலர் ஆச்சிரமத்தில் நடாத்திய நாவலர் பெருமான் குருபூசை விழாவில் பேசிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் குறிப்பிட்டார்.

தலைமைதாங்கிய சபைத் தலைவர் சித்தாந்த வித்தகர் திரு.வே நாகலிங்கம், நாவலர் பெருமான் வாழ்வையும் சம்பந்தப் பெருமான் வாழ்வையும் ஒப்பிட்டுக் காட்டினார்.

பண்டிதர் செ. சிவப்பிரகாசம், செல்வி யோககுமாரி நடராசா ஆகியோரும் உரையாற்றினர்.

விழாவை முன்னிட்டு நடைபெற்ற நாவலர் ஊர்வலத்தில் கொக்குவில், திருநெல்வேலி. நல்லூர். நாயன்மார்க்கட்டு, அரியாலை, வண்ணார்பண்ணை ஆகிய இடங்களைச் சேர்ந்த பத்துக்கு மேற்பட்ட பஜனைச்சபைகள் பங்குபற்றின.

விழாவில் திருச்செந்தூர்ப் புராண உரை வெளியிடப்பட்டது. முதற் பிரதியைத் திரு. பொ. சிவசுப்பிரமணியம்பெற்றார். பண்டிதர் கா. நமசிவாயம் குழுவினரால் புராணபடனமும் நிகழ்த்தப்பட்டது.

## ரூபா 17 000

ஊர்காவற்றுறை. திங்கள்

கரம்பன்-மெலிஞ்சிமுனை வீதி திருத்தத்திற்கு பதினேழாயிரம் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது

## இடமாற்றம்

பளை, திங்கள்

கடந்த மூன்று வருடங்களாக யா/போரகறுப்பு அ. த. க. வித்தியாலயத்தில் பதில் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. சி பொன்னையா கிளிநொச்சித் தொகுதியில் கனகபுரம் அ. த. க வித்தியாலயத்திற்கு தலைமை ஆசிரியராக மாற்றப்பட்டுள்ளார். இப் பாடசாலையில் கடமையாற்றிய சிரேஷ்ட உதவிஆசிரியர் திரு மு. அரியரத்தினம் பதில் தலைமை ஆசிரியராகக் கடமை ஏற்றுள்ளார்

வெற்றிலைக்கேணி றோ. க. த. கலவன் பாடசாலையில் ஆங்கில மாணவ ஆசிரியராகக் கடமைபுரிந்த திரு. ஆ. பேரம்பலம் போக்கறுப்பு அ. க க. வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

## வீதி திருத்தப்படும்

மண்டைதீவு, திங்கள்

கடந்தபன்னிரண்டு வருடகாலமாக பொதுமராமத்து இலாகாவினால் மண்டைதீவு கிழக்கு அம்மன் கோவில் வீதி பொறுப்பேற்கப்பட்டிருந்தும் இதுவரை வீதிசெப்பனிடப்படாதிருந்தது தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. நவரத்தினம் பொதுமராமத்து அமைச்சருக்கு இதுபற்றிச் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து இப்போது திருத்தவேலை ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

## தனித் தொகுதி வேண்டாம்

சுழிபுரம். திங்கள்

பிராமணர்கள் சிறுபான்மையினர் இல்லை. அவர்களுக்கென ஓர் தனித் தொகுதி தேவையில்லை. ஒவ்வோர் கிராமங்களிலும்பிராமணர்கள் நல்ல மதிப்புடன் வாழ்கிறார்கள், மதிக்கப்படுகின்றார்கள்.

சுழிபுரம் பிராமணர் சேவாசங்க செயலாளர் திரு. எஸ். வைத்தீஸ்வரன் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

வீதி, யாழ்ப்பாணம். 1600

கார்:

மிகவும் நல்ல நிலையில் சொந்தப் பாவிப்பிலுள்ள E N கடைசித் தொடர்பிலக்கமுள்ள மொறிஸ் ஒக்ஸ்வோட் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. Dr. க. செல்வத்துரை, சங்கரத்தை, வட்டுக்கோட்டை. 1592

மல்லாகம் கோட்டுக்கருகாமையில் வீடு கட்டுவதற்கு வசதியான 7 12 பர. காணி விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு K. விஜயரத்தினம், நெடுங்கேணி, அளவெட்டி வடக்கு. 1593

க. ஐயாத்துரை ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்,

## மூதூர் இரு காரியாதிகாரி பிரிவுகளாகும்

திருகோணமலை, திங்கள் மூதூர்த் தொகுதி இரு காரியாதிகாரி பிரிவுகளாகப் பிரிக்கப்படவிருக்கின்றது. ஒன்று சேருவிலைப்பகுதியாகவும் மற்றது மூதூர் பிரிவாகவும் பிரிக்கப்படும்.

சேருவிலைப்பகுதிக்கு பௌத்த சிங்கள காரியாதிகாரி ஒருவரை காரியாதிகாரியாக நியமிக்கும்படி இங்குள்ள பௌத்த குரு ஒருவர் கேட்கவிருக்கின்றார்.


ராணி (யாழ்ப்பாணம்) [தினசரி 3 காட்சிகள்]
ஜெமினி - சரோஜாதேவி
எஸ்.எஸ்.ஆர்.-ராஜசுலோஜனு நடித்த
குலவிளக்கு

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
ரவிச்சந்திரன்—கே ஆர். விஜயா நடித்த
நினைவில் நின்றவள்
கிங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை]
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
(விரைவில் வருகிறது]
தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
பிரிபோயா, போயா 4 காட்சிகள்
ஏ. பி. நாகராஜனின் தயாரிப்பில் உருவான மற்றுமோர் வெற்றிச்சித்திரம்
★ சிவாஜி ★ பத்மினி
★ ஜெமினி ★ சாவித்திரி
★ முத்துராமன் ★ கே ஆர்.விஜயா
★ நாகேஷ் ★ மனோரமா
நடித்த
திருவருட் செல்வர்
[ஈஸ்ட்மென் கலர்]

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி - கே. ஆர் விஜயா நடித்த
செல்வம்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி-கே. ஆர். விஜயா நாகேஷ் நடித்த
தங்கை

கடசி வாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
தென்னகத் திரைகளில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச்சித்திரம்
எதிர் நீச்சல்
இரவு 9-45க்கு மட்டும்
எம் ஜி ஆர் -பானுமதி நடித்த
மதுரை வீரன்

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30 மணி
எம் ஜி.ஆர். -ராஜசுலோசனு நடித்த
நல்லவன் வாழ்வான்

வல்வெட்டித்துறை
றஞ்சனு தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
BEAUTIES by NIGHT

MANOHARA
Daily 4-45, 7&9-45, p. m
Poya, Pre-poya 4 shows
Janet Leigh
Edward G. Robinson
in
OPERATION GRANDSLAM
(Techni color)

REGAL JAFFNA
Daily 4-45, 7, & 9-45 p m
Poya, Pre-Poya 4 shows
Fernando Sancho
&
Raffaella Carra
in
OUR AGENT FLIT
(Eastman color)


சேரும் [illegible] கௌரவம் உயரும்.

**மிதுனம்-** சிந்தையில் குழப்பநிலை தோன்றக்கூடும். மனைவியின் உடல்நிலை சிறிது கவலையைத் தரலாம் செலவினங்கள் அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும். சிலர் கடன்படவும் நேரிடலாம். தெய்வ நம்பிக்கை நன்று.

**கடகம்-** பாக்கியவிருத்தியுடன் பரம்பொருளின் அருளும் [illegible]டக்கும். தக்க சமயத்தில் உதவுவதற்குத் தந்[illegible] முன்வ[illegible]வார். பெரிட இடத்துத் தொடர்பொன்றுஇ[illegible] ஏற்படலாம். சிறப்பான தினம்.

**சிம்மம்-** எதிலும் முன்னணியில் நிற்பீர்கள். பிறரின் கவனம் உங்கள்மீது செலுத்தப்படும். சொந்தமாகத் தொழில் செய்வதில் ஆர்வம் பிறக்கும் அரசாங்க ஊழியராயின் பதவி உயர்வு கிடைக்கலாம்.

**கன்னி-** புதுமையான செய்தியொன்று கிடைக்கலாம் சிலர் அரசியலில் குதிப்பதற்கும் ஆலோசிக்கக் கூடும். பொதுமக்களின் ஆதரவுக்கும் பொருள் விருத்திக்கும் சிறப்பான இடமுண்டு. வெற்றித்தினம்.

**துலாம்-** எதிலும் தடுமாற்றநிலை ஏற்படும். குசுகுசுப் பேச்சுக்கள் மூலம் அவதூறுகள் பரப்பப்படலாம். வியாபாரத்துறையில் மந்தநிலை காணப்படுகின்றது. உடல் நலத்தைப் பேணிக்கொள்ளவும்.

**விருச்சிகம்-** ஆசைவார்த்தைகளின் மூலம் உங்களிடமிருந்து அகப்பட்டதைச் சுருட்டுவதற்குச் சிலர் முனைவார்கள். இனந்தெரியாத வேதனையால் தாக்கப்படுவீர்கள். நிதானம் விரும்பத்தக்கது.

**தனுசு-** வாழ்க்கையில் ஏற்படும் திடீர் திருப்பம் திரவிய இலாபத்தை கொண்டுவரலாம். வணிகர்கள் புதிய துறைகளில்முதலீடுசெய்வதற்கு விரும்புவார்கள். நண்பர்கள்ஆதரவும்கிடைக்கும்

**மகரம்-** அமைதிக்குப் பங்கம் ஏற்படும் சம்பவங்கள் இடம்பெறலாம். நெருங்கிய உறவினர் ஒருவருடைய உடல்நலம் பாதிக்கப்படலாம். வைத்தியச் செலவுக்ும் இடமுண்டு. நிதானம் வேண்டும்.

**கும்பம்-** ஆக்கப்பணிகளில் ஈடுபடுவீர்கள். பிறருடைய ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். தாய்வழிமூலம் நற்செய்தி கிடைக்கலாம். எதிர்பாராத விருந்துபசாரத்துக்கும் இடமேற்படும்.

**மீனம்-** நீண்ட நாட்களின் பின்பு இன்று நிறைவான தினம். எதிர்பார்த்த பொருள் கைவந்து சேரும். பிரம்மச்சாரிகளின் வாழ்க்கையில் மாரனின் கணைதாக்கும். சுவையான சம்பவங்கள் இடம் பெறும்.


நத்தார் - புதுவருட
மலிவு விற்பனை
இன்று 9-12-69 முதல் 31-12-69 வரை
போன் 7099
இலவசம்! இலவசம்!! இலவசம்!!!
ரூபா 50/-க்கு மேல் ஜவுளி வாங்குப[illegible]
ஒவ்வொருவருக்கும் வெகுமதி வழங்கப்படும்.
சகலவித சேலை வகைகள், றெடிமேட் உடுப்புகள் மற்றும் எல்லாத் துணிவகைகளினதும் விலைகள் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளன.
ரொலறம்ஸ்
46 மெயின்வீதி — யாழ்ப்பாணம்.


மதியான ஆலயத்திற்குச் சொந்தமான பொருட்கள் களவாடப்பட்டுள்ளதாகச் சுன்னுகம் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. குத்துவிளக்குகள்தட்டங்கள் போன்றன களிவுபோன பொருட்களில் சிலவாகும்: பொலிஸார் இத்திருட்டுக் குறித்துப் புலன்விசாரணை செய்து, சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்து றிமாண்டில் வைத்துள்ளனர். மேலும் சிலர் பொலிஸாரார் தேடப்படுகின்றனர்.

வீதி திருத்தத்திற்கு பதினேழாயிரம் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது

திரு. எஸ். வைத்தீஸ்வரன் வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.


அரைச்சலார்
1-1-70 முதல் 15-1-70 வரை
கொழும்பு ஸ்ரூடியோ
யாழ்ப்பாணம்.

ஒரு ஈட்டிகள் ஒரு சிவிறி
ஹேஸ்ப்ரே
ஆட்டோ



அதளிக்கும் போது முற்றுகத் தன்னாலேயே இயங்குகிறது. இது சம அளவான தூற்றல்களை 60 முதல் 70 சதுர அங்குலம் வரை பாய்ச்சுகிறது. ஆட்டோ, மின்சார முறையில்காய்ச்சி பொருத்தப்பெற்ற. துரு தடுக்கும் பித்தளைக் கலன், இரட்டை ஈட்டி, உள்ளடக்கிய வடிகட்டி, அமுக்கமானி என்பன கொண்டது.

ரூ. 395/00

உதிரிப்பாகங்கள் எப்போதும் கிடைக்கும்.

இலங்கையில் உற்பத்தி செய்வோர்:
ஹேலீஸ் லிமிட்டட்
400. டீனஸ் றோட், கொழும்பு-10. தொலைபேசி 96333
VISION, 128/69


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் 300 சிவில் சேவை ஊழியர் தற்காலிக வேலை நீக்கம்

## துஷ்பிரயோகம், லஞ்சஊழல் குற்றச்சாட்டு மீது விசாரணை

கராச்சி. டிசம்பர் 8

பாகிஸ்தானில் முன்னூறுக்கு மேற்பட்ட சிவில் சேவை உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து தற்காலிகமாக நீக்கிவைக்கப் பட்டுள்ளனர். முன்னாள் பாகிஸ்தான் அதிபர் பீல்ட் மார்ஷல் அயூப்கானின் ஆலோசகராகக்கடமையாற்றிய கோகார் என்பவரும் தற்காலிகமாக வேலைநீக்கம் செய் யப்பட்டுள் ளவர்களில் ஒருவர் மற்றும் 16 பொலிஸ் அதிகாரிகளும் இதில் அடங்குவர்.

பதவியை முறைதவறி உபயோகித்ததாகவும் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் சந்தேகத்தின் மீது இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் விசேஷ விசாரணை மன்றத்தில் விசாரணைசெய்யப்படுவர். விசாரணையின் முடிவில் தனது முடிவுகளை அந்த மன்றம் அதிபர் யஹ்யாகானிடம் சமர்ப்பிக்கும் பாகிஸ்தானின் ராணுவச் சட்டத்தின்படி இந்த உத்தியோகத்தர்கள் ஓராண்டு காலத்துக்குள் தங்கள்சொத்துக்களை விற்கவோ, மாற்றவோ கூடாது இந்தக்குற்றச் சாட்டுகள் நிரூபிக்கப் பட்டால் வேலையை இழப்பதுடன் சிறைவாசமும் பெறுவர், சொத்துக்களும் பறிமுதல் செய்யப்படும்.

## எகிப்துப்படைகளிடம் இஸ்ரேலிய நிலைகள்

### கெய்ரோதகவலை இஸ்ரேல்மறுக்கிறது

கெய்ரோ, டிச. 8

சூயஸ் கால்வாயின் கிழக்குப்பகுதிக்குள் ஐக்கிய அரபுக்குடியரசின் தரைப்படைப் பிரிவைச் சேர்ந்த 250 துருப்புகள் நுழைந்துஇஸ்ரேலிய நிலைகளைத் தாக்கிச் சேதப்படுத்தியதாக ஐக்கிய அரபுக் குடியரசு இராணுவ அறிக்கையொன்று தெரிவித்தது. இஸ்ரேலிய நிலைகளை இத்தரைப்படைப் பிரிவினர் 24 மணி நேரம் தங்கள் வசம் வைத்திருந்ததாகவும் அந்த நிலைகளிலுள்ள சாதனங்களை அழித்துவிட்டு வெற்றிகரமாகத் திரும்பிவிட்டதாகவும் அந்த அறிக்கை கூறியது.

இதை இஸ்ரேலியர் மறுத்துள்ளனர். சூயஸ்கால்வாயின் கிழக்குப்பகுதியில் தங்கள்நிலைகளில்யாரும் நுழையவில்லையென்றும் அங்குள்ள நிலைகளுக்கு எவ்வித சேதமும் ஏற்படவில்லையென்றும் இஸ்ரேலியர் தெரிவித்துள்ளனர்.

### 6 வருடம் சிறை

இஸ்ரேலுக்காக உளவு பார்த்ததாகவும் பலஸ்தீன விடுதலை இயக்கம் பற்றிய இரகசியத் தகவல்களை இஸ்ரேலியருக்குத் தெரிவித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்ட லெபனன் பத்திரிகையாளர் ஒருவருக்கு சிரியா நீதிமன்றம் ஆறு ஆண்டு மூன்றுமாதச் சிறைத்தண்டனை விதித்தது. உளவு பார்த்த குற்றச்சாட்டை அவர் ஒப்புக்கொண்டார். இதற்காக இஸ்ரேலிடமிருந்து பணம் பெற்றதாகவும் அவர் கூறினார்.

## 'சமரசம் காணும்சமயம்''

சுழிபுரம், திங்கள் சமரசத்தன்மையுள்ளபூரண

## 'தி. மு. க. அழிக்கமுடியாத ஒரு சக்தி'

சென்னை, டிச. 8

தமிழ்நாடு நிதி அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகனின் 44-வது பிறந்ததினம்நேற்று சென்னையில் கொண்டாடப் பட்டது. இவ்வைபவத்தில் தமிழ் நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி பேசுகையில் திராவிட முன்னேற்றக் கழகம் தோழமை அடிப்படையில் உருவாகி இயங்கிவரும் ஓர் இயக்கமென்றும் அது அழிக்க முடியாத ஒரு சக்தியென்றும் கூறினார்.

## 'போராட வேண்டும்'

பரேலி, டிச. 8

'நியாயமான சமூக உரிமைக்கு மக்கள் போராட வேண்டும்' என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி பரேலியில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

......

## பாராட்டு

புதுடில்லி, டிச. 8

''குடும்பத்திட்ட முறைகளை அமுலாக்குவதற்கு இந்திய அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகள் மிகவும் பாராட்டத்தக்கவை. இந்திய அரசின் இதர முக்கிய அபிவிருத்தித் திட்டங்களோடு, குடும்பத்திட்டமும் போட்டி போட்டே முன்னேற வேண்டியுள்ளது. எனவே பல சந்தர்ப்பங்களில், தேவையான நிதிவளமின்மையால், குடும்பத் திட்ட வேலைகள் பாதிக்கப் படத்தான் செய்கின்றன''

இவ்வாறு ஐ.நா.விலிருந்து இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள குடும்பத்திட்ட ஆலோசனைக்கமிட்டி, தனது இடைக்கால அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளது.

......

## நாஸர் மத்தியஸ்தம் செய்வார்

சானா, டிச. 8

தென் யேமன் குடியரசுக்கும் சவூதி அரேபியாவுக்குமிடையிலுள்ள தகராறை சுமுகமாகத் தீர்ப்பதற்கு மத்தியஸ்த முயற்சிகளை மேற்கொள்ள ஐக்கிய அரபுக்குடிரசு அதிபர் நாஸர் முன்வந்திருப்பதாக தென் யேமன் அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

யேமன் மீதான பகை நடவடிக்கைகளை சவூதி அரேபியா நிறுத்திக்கொள்ளவிட்டால் ரபாத்தில் நடைபெறவிருக்கும் அரபு உச்சி மகா

## வயோதிபருக்கு எதிராக வழக்கு

மல்லாகம், திங்கள்

சுமார் 40 ரூபா பெறுமதியான யன்னலைத் திருடியதாக வேலுப்பிள்ளை கதிரேசு (வயது 80) என்ற வயோதிபரை காங்கேசன்துறைப் பொலிசார்கைதுசெய்தனர். காங்கேசன்துறை ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரியின் வீட்டிலிருந்து களவாடியதாகக் குற்றம் சுமத்தி, பிரஸ்தாப வயோதிபருக்கு எதிராகப் பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்செய்தனர்

வழக்கு விசாரணை அடுத்த மாதம் 4-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## எதிரி விடுதலை

ஊர்காவற்றுறை, திங்கள்

காரைநகர் திராய்ச்சந்திர மண்டபத்தினுள் இருந்து ஏ...பெட்டி பால்மாவை

## தமிழகத்திலே...!

### இ. ஆ. பெ. சுகவீனம்

திருச்சி, டிச. 8

தமிழ் அறிஞர் இ. ஆ. பெ. விசுவநாதம் உடல் நலக்குறைவு காரணமாக வீட்டிலிருந்தபடி சிகிச்சை பெற்று வருகிறார். இவர் யாருடனும் பேசக்கூடாது என்றுடாக்டர்உத்தரவிட்டிருப்பதால் இவர் கலந்து கொள்ளவிருந்த நிகழ்ச்சிகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

0 0 0

### சுப்பிரமணியம் வேதனை

திருச்சி, டிச. 8

'நாங்கள் மாலையை மட்டும் எதிர்பார்த்து வரவில்லை. இதுபோன்ற மண், கல், சேறு, செருப்பு எல்லாவற்றையுமே எதிர்பார்த்துத் தான் வந்திருக்கிறோம்.''

இவ்வாறு சின்டிக்கேட் குழுவினர் தன்மீது சேறு, செருப்பு ஆகியன வீசியது குறித்து பதிலளித்துப் பேசுகையில் சி. சுப்பிரமணியம் சொல்லி வருத்தப்பட்டார்.

0 0 0

### பக்தவத்சலம் கேள்வி

கோவை, டிச. 8

''சின்டிக்கேட் காங்கிரசார் கூட்டும்தமிழ்நாடுகாங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்துக்கு எனக்கும் மற்றும் பலருக்கும் அழைப்பு அனுப்பப்போவதில்லை யென்றும் எங்களைக் கட்சியிலிருந்து விலக்கிவிட்டதாகவும் கக்கன் கூறுகிறார். எங்களைக் கட்சியிலிருந்து விலக்க இவர் யார்? இவருக்கு எவர் அதிகாரம் கொடுத்தார்கள்'' தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் இங்கு நடைபெற்ற காங்கிரஸ் ஊழியர் கூட்டமொன்றில் இவ்வாறு பேசுகையில்கேட்டிருக்கிறார்

0 0 0

### பெரியார் நன்கொடை

திருச்சி, டிச. 8

ஈரோட்டிலுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிக்கு ஈ. வே. ரா பெரியார் ஒரு லட்சம் ரூபா நன்கொடையாக வழங்கியிருக்கிறார். அவர் இத்தொகையை தனது வீட்டிற்கு வருகை தந்த தமிழக முதல்வர் மு. கருணாநிதியிடம் கொடுத்து மேற்படி ஆஸ்பத்திரியில் மேலதிகமாக 80 படுக்கைகள் அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யும்படியும் கேட்டுக்கொண்டார்.

......

## நாவலர் கருத்துக்கள் பரவ...

கோப்பாய், திங்கள்

'சைவமும் சமயக்கல்வியும் ஒருசேர இணைந்து வளர்ச்சியடைய நாவலரால் எழுதப்பட்ட நூல்கள், அவரது நன்மொழிகள் ஆகியவற்றை மலிவுப் பதிப்புகளாக வெளியிட்டுபாடசாலை மாணவர்களுக்கு வழங்க சமயப்பிரமுகர்களும், தமி

## மத்திய பஸ் நிலையம் நெல்லியடியில் நிறுவப்படும்

புலோலி, திங்கள்

நெல்லியடியில்மத்திய பஸ் நிலையம் ஒன்று அமைக்கப் படவிருக்கிறது- இந்நிலையம் முக்கியமாக பருத்தித்துறையிலிருந்து புறப்படும் பஸ்கள் தங்கி வெளியிடங்களுக்குச் செல்வதற்காகவும் யாழ்ப்பாணம், கொடிகாமம் சாவகச்சேரிபோன்ற இடங்களுக்குச் செல்லும் பிரயாணிகளுக்காகவும்

## "தேசியவீரர்நாவலர்"

சுழிபுரம், திங்கள்

''நாடும் ஏடும் போற்றும் வகையில் நாவலர் பெருமானின் நாமம் மக்கள் எல்லோருடைய மனதிலும் குடிகொண்டுள்ளது. தேசிய வீரர்களில் ஒருவராக பாராட்டத்தக்க நாவலர் சைவம், தமிழ் இரண்டும் வாழவளர தமது வாழ்வை அர்ப்பணித்தார். சைவ சமய நூல்கள், அழியாதவாறுபாதுகாத்தும் மேலும் பல புதிய நூல்களை எழுதியும், கல்விக்கூடங்களை கட்டியும் செய்தசேவை நாவலர் பணிக்கு அழியாத முத்திரையாகும். நாவலரை நாம் எண்ணும்போது அவர் பணியைத் தொடர்வதே சாலப் பொருத்தமாகும்''

இவ்வாறு வழக்கம்பரை அம்மன் கோவில் மண்டபத்தில் நடைபெற்ற நாவலர் விழாவில் பேசிய ஆசிரியர் திரு. கா நடராசா பி. ஏ. குறிப்பிட்டார்.

விழாவுக்கு திரு. க, வாமதேவன் தலைமைவகித்தார். விழா ஆரம்பமாவதற்குமுன்னர் கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்றது. திரு. சி. வெங்கடாசலபதி நன்றியுரை கூறினார்.

## அங்கத்தவர்களுக்கு கடிதம்

சுழிபுரம், திங்கள்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின்விசேடகூட்டம் ஒன்றை விரைவாக கூட்டுமாறு கோரிய அறுபது அங்கத்தவர்களுக்கு தனித்தனியாக பதிவுத் தபால் மூலம் சங்கக் காரியதரிசியினால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அக்கடிதத்தில் வைத்தியசாலையின் கணக்கு அறிக்கை வெளியாகியுள்ளதாகவும், பொதுக்கூட்டம் நடாத்த நான்கு மாதங்கள் உள்ளதென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

......

## இடமாற்றம்

சுழிபுரம், திங்கள்

பண்டத்தரிப்பு பட்டின சபையின் காரியதரிசியாக கடமையாற்றிய திரு. எஸ், சின்னையா பதவி உயர்வுடன் அடுத்தமாதம் முதலாம் திகதி தொடக்கம் களுத்துறை நகரசபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

......

## சுகாதாரப் படக்காட்சி

சுழிபுரம், திங்கள்

சுகாதாரப் பகுதியினரால் இலவச படக்காட்சி விசவத்தனை முருகமூர்த்தி கோவில் முன்றலில் நேற்று இரவு

## நால்வர்கோவில்

கோப்பாய், திங்கள்

சைவபரிபாலன சபையின் நாவலர் ஆச்சிரமத்தில் நால்வர் கோவில் அமைப்பதற்கான ஆரம்பவேலைகளை மேற்படி கோவில் திருப்பணிச்சபையினர் மேற்கொண்டுள்ளனர்.

இதற்குத் தேவையான நிதியுதவியை அவர்கள் பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.

## வெள்ளத்தில் மூழ்கின

உடுப்பிட்டி, திங்கள்

உடுப்பிட்டிக் கிராம சபையின் 7-ம் வட்டாரமான ''நாவலடி''யில் கடும் மழை பெய்யும் போது ஏற்படும் வெள்ளத்தினால் பல வீடுகள் வெள்ளத்துள் மூழ்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இங்கு பிற பகுதிகளிலிருந்து வரும் வெள்ளம் ஓடிச்செல்வதற்கு வடிகால் இல்லாமையே இவ்வபாய நிலைக்குக் காரணம்.

இதுசம்பந்தமாக7-ம் வட்டார உடுப்பிட்டிக் கிராம சபை உறுப்பினர் திரு. கே. சிவலிங்கம் பிரதான வீதியின் அருகில் உடனடியாக வடிகால் வெட்டவேண்டியது அவசியம் என்று பொது மராமத்து மேலதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

## கிளை நிறுவுக'

உடுப்பிட்டி, திங்கள்

உடுப்பிட்டித் தொகுதியிலுள்ள பிரதான சந்தைத் தலமும், மத்திய நிலையமும், முக்கிய பட்டினமுமான நெல்லியடியில் மக்கள் வங்கிக்கிளை ஒன்று நிறுவ வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்திக் கரவெட்டி முற்போக்கு வாலிபர் மன்றம் உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி. யுமான திரு மு. சிவசிதம்பரத்திற்கு மகஜர் அனுப்பிவைத்துள்ளது.

## ஒத்திவைப்பு

விஸ்வமடு, திங்கள்

விஸ்வமடு விவசாயப் படை வீரர்களுக்கும் உடுத்திரபுரம் விளையாட்டுக்கழக வீரர்களுக்குமிடையே கிளிநொச்சி ரெட்றிக்கோ விளையாட்டு மைதானத்தில் நடந்த உதைபந்தாட்ட விளையாட்டுப் போட்டியில் விஸ்வமடு விவசாயப்படை வீரர்கள் 1 கோல் கூடப் போட்டாலும் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மழையின் காரணமாகப் போட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளனர். சூயஸ்கால்வாயின் கிழக்குப்பகுதியில் தங்கள்நிலைகளில்யாரும் நுழைய ... இதற்காக இஸ்ரேலிடமிருந்து பணம் பெற்றதாகவும் அவர் கூறிஞர்.

## 'சமரசம் காணும்சமயம்'

சுழிபுரம், திங்கள்

''வாழ்க்கையைப் பயனுள்ளதாக்க வகுத்த வழி சமயம். உலகில் இன்று பலப்பல சமயங்கள் வழங்குகின்றன. சைவசமயமோ சிவனை வழிபடுஞ் சமயமாய்ச் சிவன் உள்ள கயலந் தொடக்கம் உள்ள சமயமாய் விளங்குகிறது. சிவனுக்குத் தொடக்கம் இல்லை; அதனுல் சைவ சமயமும தொடக்கமில்லாதது. எல்லாச்சமயங்களிலும் விதிக்கப்பட்ட புண்ணியங்கள் சைவசமயத்தில் விதிக்கபட்டுள்ளன. அந்தச் சமயங்களிலெல்லாம் விலக்கப்பட்ட பாவங்கள் சைவசமயத்தில் விலக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு மேலும் பல புண்ணியங்களை விதித்தும், பாவங்களை விலக்கியும் உள்ளதனுலே சைவ சமயம் சமரசத்தன்மையுள்ளபூரண சமயமாகும்''.

இவ்வாறு பண்ணுகம் இந்து சமய விருத்திசங்கத்தின் ஆதரவில், விசவத்தனை முருகப்பெருமான் சந்நிதியில் சமயதீட்சை செய்யப்பெற்றவர்கள் மத்தியில் பிரமஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் பேசுகையில் குறிப்பிட்டார்.

முப்பதுக்கு மேற்பட்ட இளைஞர்களும், பெரியவர்களும் தாய்மாரும் சமய தீட்சை பெற்றுக்கொண்டனர்.

பிரமஸ்ரீ சோ. நடராசக் குருக்கள், ச. வைத்தீஸ்வர சர்மா, பண்டிதர் அ. ஆறுமுகம் என்போரும் சமய தீட்சை நடத்துவதில் துணை புரிந்தனர்.

## காங்கிரஸ் மகாநாடு ஏற்பாடுகள்

யாழ்ப்பாணம், செவ்.

தமிழ்க்காங்கிரஸ் மகாநாட்டையொட்டி விவசாயிகள் மகாநாடு, மாதர் மகாநாடு ஆகியவற்றை நடத்துவதென்று சாவகச்சேரியில் நேற்று முன்தினம் நடந்த தமிழ் காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

திரு. ஆர். என். சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இம்மாதம் 28-ம், 29-ம், 30-ம் தேதிகளில் மகாநாட்டை சாவகச்சேரியில் நடத்துவதென்றும், கடைசி நாள் யாழ்ப்பாணத்தில் பொதுக்கூட்டத்தை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

2-ம் நாள் சாவகச்சேரியிலும்ஒருபொதுக்கூட்டத்தை நடத்தவேண்டுமென்ற வாலிப முன்னணியின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் மாட்டுவண்டி, டிராக்டர், கார், சயிக்கிள் ஊர்வலங்களை கடைசிநாள் நடத்துவதென்றும் மகாநாட்டுமலர் ஒன்று வெளியிடுவதென்றும் முடிவுசெய்யப்பட்டது. வரவேற்புக் குழு, நிதிக்குழு, கலைவிழாக் குழு, பொதுச்சபைக்குழுஆகியனதெரிவுசெய்யப்பட்டன.

## பௌத்த தமிழ் பாடசாலை ஆசிரியர்களுக்கு வீடுகள்

பருத்தித்துறை, திங்கள்

கரவெட்டி, அல்வாய் ஆகிய பௌத்த தமிழ்ப் பாடசாலைகளுக்கு அண்மையில் சகல வசதிகளும்உள்ள வீடுகள் விரைவில் கட்டப்பட்டு தூர இடங்களிலிருந்து வரும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படல்வேண்டுமென்றும் தூர இடங்களிலிருந்து முக்கியமாக மழைகாலத்தில் பயணம் செய்யும் ஆசிரியர்களுக்கு முதலிடம் வழங்கப் படல் வேண்டுமென்றும் கோரும் தீர்மானமொன்று கரவெட்டி நாரத பௌத்த தமிழ்ப் பாடசாலை பெற்ருர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. ஏற்கனவே அகில இலங்கைப் பௌத்த தமிழ்காங்கிரஸ் இக்கோரிக்கையை விடுத்துள்ளதுகுறிப்பிடத்தக்கது.

கல்லூரி ஸ்தாபகரும் ஆசிரியரும்திரு. கே. இராசரத்தினம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் மேற்படி பாடசாலையை விஸ்தரிப்பதற்கான பல ஆலோசனைகளும் கூறப்பட்டன. மேலும் இரவு நேரங்களில் இலவசமாக வளர்ந்தோர் வகுப்புகள் நடாத்தப்படல் வேண்டுமென்றும் மாணவ மாணவிகளுக்கு விளையாட்டு வசதிகள் செய்து வைக்கப் படல் வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டன.

... முன்வந்திருப்பதாக ... யேமன் அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

யேமன் மீதான பகை நடவடிக்கைகளை சவூதி அரேபியா நிறுத்திக்கொள்ளவிட்டால் ரபாத்தில் நடைபெறவிருக்கும் அரபு உச்சி மகாநாட்டில் இப்பிரச்னையை யேமன் கிளப்புமென்றும் அவர் தெரிவித்தார்.

## கென்யா தேர்தல்

நைரோபி, டிச. 8

விடுதலைக்குப் பின் கென்யாவில் நடந்த முதலாவது பொதுத் தேர்தலில் இப்போதை ஆட்சிமன்றப் பிரதிநிதிகளில் அறுபது சதவீதமானவர்கள் தோல்வியடைந்துள்ளனர். ஐந்து மந்திரிகளும் தங்கள் ஸ்தானங்களை இழந்துள்ளனர்.

எதிர்க் கட்சி தடை செய்யப்பட்டிருபதால் ஜோமோ கென்யாட்டாவின் கட்சி மட்டுமே தேர்தலில் போட்டியிட்டது ......

### ஒன்றிப்பு விழா

பண்டத்தரிப்பு, திங்கள்

இளவாலைக் கியூறியாவின் கீழுள்ள மாதா சபையினர் தமது வருடாந்த ஒன்றிப்பு விழாவை இம்மாதம் 16-ம் திகதி கொண்டாடுகின்றனர் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

... வைக்கப்பட்டுள்ளது.

## எதிரி விடுதலை

ஊர்காவற்றுறை, திங்கள்

காரைநகர் கிராமச்சங்க மண்டபத்தினுள் இருந்து ஏழு பெட்டி பால்மாவை களவாடியதாக காரைநகர் கிழக்குவாசியான சிதம்பரப்பிள்ளை மகாலிங்கம் மீது தொடரப்பட்ட வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையின்பின் எதிரியை நீதிபதி விடுதலைசெய்தார். எதிரிசார்பில் வழக்கறிஞர் திரு. ஏ. குலநாயகம் ஆஜராஞர். ......

## இணைப்புக்குழுவுக்கு வரும் தீர்மானம்

மாவிட்டபுரம், திங்கள்

''கிராம அபிவிருத்தி சங்கங்கள் ஒழுங்காக நடைபெருத படியாலும், பிரிவு மனப்பான்மை செயற்படுவதாலும், கிராம அபிவிருத்தி சங்கங்களை உள்ளூராட்சி மன்றங்களுடன் சேர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும்'.

இவ்வாறு கோரும் தீர்மானமொன்றை எதிர்வரும் 17ம் திகதி நடைபெற உள்ள யாழ் பிரதேச உள்ளூராட்சி மாவட்ட இணைப்பு குழுக்கூட்டத்தில் உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. எஸ் முத்துலிங்கம் கொண்டு வர இருககிருர்.

## 'கூட்டுறவு, கல்வி, அரசியல்: வீரசிங்கத்தின் சேவை'

யாழ்ப்பாணம், செவ்.

கூட்டுறவுத்துறையில்மாத்திரமல்லகல்வித்துறையிலும் அரசியல் துறையிலும் அரிய சேவையாற்றியவர் திரு வீரசிங்கம் என்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் கலையரசு சொர்ணலிங்கம் பேசும்போது கூறிஞர்

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபை உபதலைவர் திரு ஆர் சி எஸ் குக் தலைமையில் நடந்த வீரசிங்கம் நினைவு தினக் கூட்டத்தில் கலையரசு சொர்ணலிங்கம் மேலும் பேசுகையில் ''இக்காலத்தில் மாணவர்கள் சீர்கெடுவதற்குக் காரணம் நல்ல ஆசிரியர்கள் இல்லாததுதான் திரு வீரசிங்கம் நல்ல ஆசிரியராக இருந்து மாணவர்கள்மத்தியில் ஒழுக்கத்தையும் பணபாட்டையும் வளர்த்தார்'' என்ருர்.

கூட்டுறவுஉதவிஆக்க ஆணையாளர் திரு வி கனகசபை பேசும்போது கூறியதாவது: வடபகுதிகூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்காக அவர் பாடுபட்டார். அவரின் சிறந்த கொள்கைகளைக்கடைப்பிடித்து நாம் முன்னேற வேண்டும். வடபகுதி கூட்டுறவு இயக்கம் இலங்கையில் முக்கியத்துவம் பெற்றுள்ளதற்கு திரு வீரசிங்கத்தின் சேவைதான் காரணம்.

திரு பி வி மிக்கேல்பிள்ளை கூறியதாவது: திரு வீரசிங்கத்தின் கூட்டுறவுவழிகளை கடைப்பிடித்து, நமதுகூட்டுறவு இயக்கங்களை வளர்க்க வேண்டும். எந்தப்பகுதியில் கூட்டுறவு கூட்டங்கள் நடந்தாலும் அவர் செல்லத்தயங்கமாட்டார். முல்லைத்தீவுப்பகுதியிலுள்ள கூட்டுறவு இயக்கங்கள் வளர்ச்சியடைந்தமைக்கு அவரது சிறந்த வழிதான் காரணம் ஆட்சிமன்ற உறுப்பினராக இருந்த போது பல சேவைகளைச் செய்துள்ளார். சம்மேளனத்தலைவராக திரு வீரசிங்கத்தை இரு சிங்களவர்களே பிரேரித்து அனுமதித்தார்கள் இதிலிருந்தே அவர் சிங்கள கூட்டுறவாளர் மத்தியிலும் எவ்வளவு நம்பிக்கையைப் பெற்றிருந்தார் என்று தெரிகிறது''

திரு ரி மயில்வாகனம் பேசும்போது அவர் கூட்டுறவு இயக்கத்திற்கு வழிகாட்டியாக விளங்கிஞர் என்று கூறிஞர்.

... வளர்ச்சியடைய நாவலரால் எழுதப்பட்ட நூல்கள், அவரது நன்மொழிகள் ஆகியவற்றை மலிவுப் பதிப்புகளாக வெளியிட்டுபாடசாலை மாணவர்களுக்கு வழங்க சமயப்பிரமுகர்களும், தமிழறிஞர்களும் முன்வரவேண்டும். அத்துடன் நாவலரது கருத்துக்களையும் அவரது சமய போதனைகளையும் பாடசாலைகளில் இந்துமாணவர்களது பிரார்த்தனை நேரத்தில் அவர்களுக்குக் கற்பிக்க பாடசாலை தலைமை ஆசிரியர்கள் ஆவனசெய்ய வேண்டும்'

கோப்பாய் திருவருள் தவநெறிமன்றம் சகல பாடசாலைத் தலைமையாசிரியர்களையும், அதிபர்களையும் இவ்வாறு கேட்டுள்ளது.

### மேற்றிராசன கூட்டம்

பண்டத்தரிப்பு, திங்கள்

யாழ். மேற்றிராசன வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 23-ம் திகதி நடைபெற்றுள்ளது. யாழ். மேற்றிராணியாரின் பூசையுடன் ஆரம்பமாகும் இக்கூட்டத்தில் மேற்றிராணியாரும் உரைநிகழ்த்துவார்.

துறையிலிருந்து புறப்படும் பஸ்கள் தங்கி வெளியிடங்களுக்குச் செல்வதற்காகவும் யாழ்ப்பாணம், கொடிகாமம் சாவகச்சேரிபோன்ற இடங்களுக்குச் செல்லும் பிரயாணிகளுக்காகவும் அமைக்கப்பட விருக்கிறது.

இந்நிலையம் அமைப்பதால் இப்பகுதி பஸ்பிரயாணிகளுக்கு சுலபமான முறையில் பிரயாணம் செய்யக்கூடியதாக இருக்கும் எனக் கருதப்படுகிறது.

அடுத்தவருட முற்பகுதியில் மத்திய பஸ்நிலையம் அமைக்கப்பட விருக்கிறது. இதற்கான தகுந்தஇடத்தை தெரிவுசெய்வதில் இலங்கை போக்குவரத்து சபை இப்போது முயற்சிஎடுத்துள்ளது. ......

### பதவி உயர்வு

விஸ்வமடு, திங்கள்

விஸ்வமடுவிவசாயப்படை முகாமில் வாகனப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய திரு. பி. சி. இராசையா உதவி முகாம் பரிபாலகராகப் பதவி உயர்வு பெற்று கடமையாற்றுகிருர் இருபத்தெட்டு வயதான இவர் கண்டி சென். அந்தனீஸ் கல்லூரி பழைய மாணவராவார்.

### சுகாதாரப் படக்காட்சி

சுழிபுரம், திங்கள்

சுகாதாரப் பகுதியினரால் இலவச படக்காட்சி விசவத்தனை முருகமூர்த்தி கோவில் முன்றலில் நேற்று இரவு காண்பிக்கப்பட்டது. குடும்பக்கட்டுப்பாடு, தொற்று நோய் பரவாமல் தடுத்தல், குடும்ப பழக்க வழக்கம், குழந்தை வளர்த்தல், கால் நடைகள் வளர்ப்பு போன்ற காட்சிகள் காண்பிக்கப்பட்டன. குடும்பக்கட்டுப்பாடு சம்பந்தமாக சுகாதாரப் பரிசோதகரால் விளக்கவுரை நிகழ்த்தப்பட்டது

ஊரைதீவு திங்கள்

தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினத்தின் முயற்சியால் அனலைதீவு-தெற்கு மேற்கு வீதியைத்திருத்துவதற்குரிய நடவடிக்கையை பொதுமராமத்து இலாகா மேற்கொண்டுள்ளது

இதற்கு முன்னேடியாக செலவு மதிப்பீடு விபரத்தை பொதுமராமத்து இலாகா கோரியுள்ளது.

நடந்த உதைபந்தாட்ட விளையாட்டுப் போட்டியில் விஸ்வமடு விவசாயப்படை வீரர்கள் 1 கோல் கூடப் போட்டாலும் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட மழையின் காரணமாகப் போட்டி இறுதியில் ஒத்தி வைக்கப்பட்டது. இப்போட்டியை இம்மாதம் 13ம் திகதி திரும்பவும் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது

### இலக்கிய மன்றம்

விஸ்வமடு, திங்கள்

விஸ்வமடுவிவசாயப்படையில் தற்போது 'திகழ்ஒளி' இலக்கியமன்றம் ஒன்றுவீரர்களால் தொடக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கிய மன்றததின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: ரி சிவலிங்கம், உபதலைவர்: எஸ் சுப்பிரமணியம், செயலாவர்: ஏ பத்தநாதன், போஷகர்கள். எம் பொன்னுத்துரை, ஏ ஆனந்தராசா, கணக்குப்பரிசோதகர்: பி கணேசபிள்ளை, பத்திராதிபர்: அன்ரன் லெனட், தனுதிகாரி: எல் சண்முகநாதன்.


ரேதை மார்க்

★ வாள்கள் ★ குழி வாள்கள் 7 அடி

★ வட்ட வாள்கள் ★ கை வாள்கள் (18'', 20'', 24'', 30'')

இவை யாவும் இப்போது எமது கைஇருப்பிலுண்டு.
உங்கள் தேவைகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்.

ஷெல் கம்பனியாரால் முதல்முதலாக தயாரிக்கப்பெற்ற

சொலிக்கனம்

PE-4

உங்களின் பொருட்களை நீடித்து பாதுகாக்கும் தன்மை வாய்ந்தது.
உங்கள் கட்டிடங்களுக்குத் தேவையான சகலவிதமான

★ இரும்புச் சாமான்கள் ★ கூரைத் தகடுகள்

★ யானை மார்க் அஸ்பெஸ்டஸ் சீற்றுகள் ★ பெயின்ற் வகைகளும்

மிக மிக மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

ஸ்டீல் சன்ஸ்

287-289, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 7035


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

ஆத்திரததிலிருந்து ஒழுங்கின்மை தோன்றுகிறது. விவேகமான எதிர்ப்பிலிருந்து ஒழுங்கு பிறக்கிறது.

—மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone 889,

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் கார்த்திகை மாதம் 23-ந் திகதி (9-12-69)


## தேசிய நெருக்கடி

வேலை நிறுத்தங்கள் பல்கலைக் கழக மாணவர்களின் கிளர்ச்சி, பகிஷ்கரிப்பு ஆகியவை பற்றி மீண்டும் இன்று தலையங்கம் எழுதுவது வாசக நேயர்கள் சிலருக்கு சலிப்பை ஏற்படுத்தலாம். அதற்காக அவர்களிடம் மன்னிப்புக் கோரவேண்டிய அவசியமிருப்பதாகநாங்கள் கருதவில்லை, நாடு மிக நெருக்கடியான ஒரு கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. வாழ்க்கைச்செலவு உயர்வினால் ஏற்கனவே அல்லற் பட்டுக்கொண்டிருக்கும் பொதுமக்கள் அடுத்துஎன்ன செய்வதென்று தெரியாது விழித்துக்கொண்டிருக்கின்றனர். ஆளும்கட்சியினரும்சரி இதர அரசியல் கட்சிகளும் சரி அடுத்த தேர்தலில் எப்படி வெற்றியீட்டுவது, ஆட்சி பீடத்தில் அமர்வதற்கு வழியென்ன என்று அடுத்த தேர்தலைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கின்றனர், மக்களைப்பற்றிச் சிந்திக்கும் போதெல்லாம் அவர்களுடைய வாக்குகள்தான் அரசியல்வாதிகளின் கண்முன் தோன்றுவதாகத் தெரிகிறதேயொழிய மக்களின் கஷ்டங்கள் தெரிவதாகத்தோன்றவில்லை. இந் நிலையில் 'ஊதுகிறசங்கை ஊதி வைப்போம். விடிகிறநேரம் விடியட்டும்' என்ற முறையில் நாம் சொல்ல வேண்டியதை மீண்டும் மீண்டும் சொல்லி வைப்பது நமது கடமையென்றே கருதுகிறோம்.

வேலை நிறுத்தங்களுக்கும் பல்கலைக்கழகமாணவர் கிளர்ச்சிகளுக்கும் அரசியல் பின்னணிதான் காரணமென்றும் அரசியல் ஆதாயத்தை அடிப்படையாக சிலர்பின்னணியில் நின்று இவற்றை தூண்டிவிடுவதாகவும் சிலர் குற்றம் சாட்டமுனைகின்றனர் ஆளும் கட்சி உட்பட அரசியல் கட்சிகளின் கட்டுப்பாட்டில்தான் இங்குள்ள பல தொழிற் சங்கங்களும் இயங்குகின்றன. இதை யாரும் மறுப்பதற்கோ மறைப்பதற்கோ இல்லை. பல்கலைக்கழக மாணவர் சங்கங் மாணவர்களும் அவர்களை உருவாக்கும் ஆசிரியர்களும் நினைத்தால் ஆகாததொன்றில்லை.

தொழிற் சங்கங்களைப் பொறுத்தவரையிலும் கூட கட்சி அரசியல் தலையீடுகளையும் கட்டுப்பாட்டையும் கைவிட்டு தொழிலாளர் நலனை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம்என்ற முறையில் தொழிலாளர் தம்மைத் தாமே வழிநடத்திச் செல்ல உறுதிகொண்டால் தொழிலாளருக்கு அவ்பெயரும் ஏற்படாது மக்களின் அபிமானமும் கிடைக்கும். தொழிலாளர் தமது சக்தியை உணர்ந்து கொண்டால் இதுகடினமல்ல

ரயில் என்ஜின் சாரதிகளினதும்கார்டுகளினதும் வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ரெயில்வே ஜெனரல் மனேஜர் சமர்ப்பித்த திட்டத்தை தொழிற் சங்கங்கள் நிராகரித்து விட்டன வேலை நிறுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது ரயில்வேயிலுள்ள இதர தொழிலாளர்களையும் வேலை நிறுத்தத்தில் இறங்கச் செய்வதற்கான முயற்சி நடைபெறுகின்றன. ஆஸ்பத்திரி ஆய்வுகூடத் தொழில் நுட்ப நிபுணர்களின் வேலை நிறுத்தமும் நீடிக்கிறது. துறைமுகத் தொழிலாளர், மத்தியவங்கி ஊழியர்கள் தபால் ஊழியர், இலங்கை வானொலி தொழில்நுட்ப ஊழியர் எனப் பல்வேறு துறைகளையும் சேர்ந்த தொழிற்சங்கங்கள் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்றும் இல்லையேல் வேலை நிறுத்தம் செய்யப் போவதாகவும் அறிவித்திருக்கின்றன. வேலை நிறுத்தம் செய்யும் ஊழியர்களுக்கும் வேலைநிறுத்தம் செய்யத் தீர்மானித்துள்ள ஊழியர்களுக்கும் குறைகளில்லாமலில்லை. இந்தக் குறைகளுக்கு நிவர்த்திக்கான ஒரே சமயத்தை தான் தேடிப்பிடிக்க வேண்டுமா?

# ஏ, பி, சி, ஆகிய நாடுகளைகொண்ட மகாசமஷ்டி ஏற்பட வேண்டும்

ஆப்கானிஸ்தானம் (ஏ), பர்மா (பி), சிலோன் (சி) ஆகிய ஏ. பி. சி. முக்கோண வடிவ அமைப்பிற்குள் வரும் நாடுகளின் மகாசமஷ்டி (confederation) ஏற்படவேண்டும் காஷ்மீர், நாகலாந்து பிரச்னைகளுடன் இந்தியா பாகிஸ்தானுக்குமிடையேயும் நல்லுறவு ஏற்பட இந்த அமைப்பு ஏற்படவேண்டும். ஆனல் இதற்கு எவ்வளவுகாலமாகும் என்றும் எப்போது அமையும் என்றும் கூறமுடியாது.

ஏ. பி. சி., என்ற முக்கோணத்தை சிறிது மனதில் உருவப்படுத்திப்பாருங்கள். அம் முக்கோணத்தில் ஏ ஆப்கானிஸ்தானம், பி. பர்மா, சி. சிலோன் (இலங்கை) ஆகிய மூன்று நாடுகளை மூன்று மூலைகளிலும் அதன் மத்தியில் பாகிஸ்தான் இந்தியா போன்ற நாடுகளையும் உள்ளடக்கிய நாடுகளின் மகாசமஷ்டி ஏற்படவேண்டும். இந்த சமஷ்டி அமைப்பு எப்போது ஏற்படும் என்று கூற இயலாது. ஆனல் அதுவரை நாகலாந்து போன்ற பகுதிகளுக்கு முடிந்த அளவு சுதந்திரம் கொடுத்து இந்தியாவுடனேயே இணைந்திருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். இப்பகுதியில் நாடுகளின் சமஷ்டி ஏற்பட்டால் அதைத்தொடர்ந்து மற்ற நாடுகளும் சமஷ்டியாகக் கூட்டுசேரலாம். முடிவில் உலக நாடுகள் சேர்ந்த ஒரே அமைப்புஏற்பட முடியும்,

ஜனநாயகத்தில் நேரடிநடவடிக்கைக்கு இடமே கிடையாது. அவரவர் கருத்துக்களைப் பிரசாரம் செய்து மக்கள் மனதை மாற்றலாம், இதற்கு முழுசுதந்திரம் ஜனநாயகம் அளிக்கிறது இம்சை அடிப்படையான வேலைத் திட்டத்தில் தீவிரம், அதி தீவிரம் மிக மிக தீவிரம் என்று அதிகரித்துக்கொண்டேசெல்வார்கள். அதே போன்று நமது அன்பை அடிப்படையாகக் கொண்ட திட்டத்தில் மென்மை மிக மென்மை மிக மிக மென்மை என்றுவளர்த்துக்கொண்டே செல்லவேண்டும். இது ஹோமியோபதி வைத்திய முறை ஹோமியோபதி என்றல்சௌம்யபதி (மென்மையான முறை) என்று பெயர்

பட்டுவிடாது. நம்மீது ஆக்கிரமிப்பு ஏற்படுமென்று பயப்பட வேண்டியதில்லை, நாம் ராணுவ தளபாடங்கள் இல்லாமல் இருக்கிறோமென்றல் படையெடுப்பவர்கள் கூட குண்டுகளை ஏந்தி வருவதற்குப் பதிலாக கைத்தடியைக் கொண்டுவருவார்கள். ஆகையால் அவர்களுடன் உட்கார்ந்து அன்புடன்விவாதிக்க முடியும் இங்கிலாந்து இந்தியாவைவிட்டுக்கொடுத்ததன்மூலம்அதன் பலம் அதிகரிக்கவே செய்தது. அதன் தார்மீக பலம் மிகவும் அதிகரித்தது.

### அரசு ஒரு மாயை

அரசாங்கம் இல்லாமல் ஒன்றுமே நடக்காதென்பது வீண்பிரமையே. நீதிஸ்தலங்களுக்கும் பள்ளிகளுக்கும் அவ்வப்போது லீவு கொடுக்கிறார்கள். அதனல் ஒன்றும் குடிமுழுகிப்போய்விடவில்லை எல்லாம் செவ்வனவே நடந்துதான்வருகின்றன. ஆகையால் அரசுக்கு ஓராண்டு லீவு அளித்துவிடவேண்டும். அரசாங்கம் இல்லையென்பதற்காக ஏதாவது நடக்காமல் நின்றுபோய்விடும்? உண்பவர்களும் வேலைசெய்பவர்களும் அவரவர்களே செயற்பட்டுத் தங்களைக் காற்பாற்றிக்கொள்வார்கள் ஆகையால் அரசு எப்பயனுமின்றி இருந்துகொண்டிருக்கிறது. அரசு என்று ஒன்று இருப்பதால்தான் மக்கள் நாங்கள் ஒன்று செய்யமாட்டோம். அரசுதான் எல்லாம் செய்யவேண்டுமென்று நினைக்கிறார்கள். இதைவிட அரசாங்கமற்றநிலைமை ஏற்படுவதே மேல். அரசாங்கம் என்பது வெறும் மாயையேயன்றி வேறல்ல.

ஜனநாயகத்தில் சிந்தனைக்கு மிகவும் குறைந்த வாய்ப்பே உள்ளது. ஜனநாயகத்தில் சராசரிநிலைமையைத்தான் காணமுடியும். அந்தக் காலத்தில் முடியாட்சியில் மிகச் சிறந்த தலைமையும் கிடைத்தது. அதே போன்று கீழான தலைமையும் ஏற்பட வாய்ப்பிருந்தது. இவ்விரண்டுமற்ற சரா

## - விநோபாஜி -

சரித் திறமையைத் தான் ஜனநாயகத்தில் காணமுடியும். ஆகையால் அரசாங்கம் இல்லாத நிலையை உருவாக்கிக் காட்டவேண்டும்.

### ஊழியர்கள் பற்றி

நம்மிடையே அநேக குறைபாடுகள் இருக்கின்றன என்பது உண்மை. குறைகளற்றவர் ஆண்டவன் ஒருவர்தான். ஆகையால் குறைகளை ஒதுக்கி நல்லவைகளை மட்டும் காண நாம் முயலவேண்டும் மறைந்துபோன முன்னோர்களின் நற்குணங்கள் இன்றும் உலகில் மறைவாகக் காற்றில் கலந்திருக்கின்றன. புராண இதிகாசங்கள் வேறு நமக்கு வழிகாட்டுகின்றன. அவைகளை இக்காலத்திற்கு உகந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். ஒரு தடவை ராமாயணத்தைப் பற்றிப் பேச்சு நடந்து கொண்டிருந்தது. குடும்பக் கட்டுப்பாட்டுக்கு உதாரணமாக நான் ராமரைக் குறிப்பிட்டேன். இராமாயணம் ராமரை புருஷோத்தமனுக, சிறந்த மனிதராக வர்ணிக்கிறது. அவருக்கு இரண்டே பிள்ளைகள் இருந்தார்கள். ராமாயண காவிய புருஷனுக மதிக்கும் ராமனுக்கும் இரண்டு பிள்ளைகள்தான் இருந்தார்கள். அவ்வாறிருக்க நாம் அவரைப் பின்பற்ற வேண்டாமா என்று கேட்டேன். ஆகையால் முன்னேர்களையும் புராணங்களையும் தற்காலசூழ்நிலையோடு இணைத்து ஆராய்ந்து தெளிவு பெறவேண்டும்.

ஊழியர்களின் பேச்சில் இனிமை இருக்கவேண்டும். நல்லவற்றையே எடுத்துக் கூறவேண்டும். அத்துடன் உள்ளத்தில் அமைதி வேண்டும். ஊழியர்கள் தினமும் ஒரு மணிநேரம்படிக்கவேண்டும். நம்முடைய பத்திரிகைகள் எங்கும் ஒவ்வொரு கிராமத்திற்கும்செல்ல வேண்டும்.

(ராஜ்கிரில் நடைபெற்ற சர்வோதய சம்மேளனத்தில் ஆற்றிய உரையின் சுருக்கம்)

# நாட்டிலும் நகரிலும்

இளைய பாரதத்தின் முதிய பெருந் தலைவர்களில் ஒருவரான சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் இன்றுடன் தொண்ணூற்றொரு ஆண்டுகளைப் பூர்த்தி செய்து கொண்டு தொண்ணூற்றிரண்டாவது படியில் காலடி எடுத்து வைக்கிறார். இந்தியாவுக்கும் பிரதானமாக தமிழ் நாட்டுக்கும் அளப்பரிய சேவைகளைப் புரிந்த இம் மாபெரும் மனிதர் மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்து 'செஞ்சரி' எடுக்கும்வரை பூரண சுகதேகியாக இருக்க வேண்டுமென்று அவருடைய எதிரிகள்கூட அவரை வாழ்த்துவார்கள்.



மதிப்புக்குரிய மகான்களின் பெயருக்குப் பின்னல் 'ஜி' என்ற எழுத்தையும் சேர்த்து அவர்களைக் குறிப்பது வடஇந்தியரின் வழக்கம். மரியாதைக்காக அவர்கள் எல்லோரையும் 'ஜி' சேர்த்தே அழைப்பார்கள். ஆனல் அகில பாரதமும் 'ஜி' சொல்லிக் குறிப்பிட்டவர்கள் நான்கு பேரைத்தான் சொல்லலாம். காந்திஜி, நேருஜி, நேதாஜி ராஜாஜி. 'சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்' என்ற பெயர் வாய் முழுவதையும் அடைத்துக் கொள்ளுகிறதென்று நினைத்து அதைச் சுருக்கி 'ராஜாஜி' ஆக்கினவர் மகாத்மா காந்தியேதான்.

சேலம் மாவட்டத்திலுள்ள ஓசூர் என்ற கிராமத்தில் ஒரு வைதீக வைஷ்ணவ ஐயங்கார் குடும்பத்தில் பிறந்த ராஜாஜி, மளமளவென்று கல்விப் படிப்புகளை முடித்து பதினெட்டாவது வயதில் பி. ஏ. தேறிவிட்டு சட்டக்கல்லூரியில் சேர்ந்து, நியாயவாதியாகினர். ஆரம்பத்தில் சேலத்திலும் பின்பு சென்னையிலும் 'பிருக்டிஸ்' பண்ணி சிறந்த 'கிரிமினல் லோயர்' எனப் பேர் எடுத்து ஏராளமான பணம் சம்பாதித்தார். இடையில் தேசப்பற்றும் மக்கள் சேவையும் அவரை ஆட்கொண்டிராவிட்டால் இன்றும் ஏராளமான பணம் சம்பாதித்துக் கொண்டே இருப்பார்.

சேலம் நகரசபைத் தலைவராயிருக்கும்போதே பலரும் அதிர்ச்சியுறும் வண்ணம் புரட்சிகரமான சமூக மாற்றங்களைச் செய்தார். முக்கியமாக தீண்டாமை

காந்தி ஆச்சிரமத்தில் தங்க நேரிட்டபோது அச்சமயம் அவர் ராஜாஜியின் புதல்வி லக்ஷ்மியுடன் கலந்து பழகவே இருவருக்கும் காதல் ஏற்பட்டது. காந்தியும் ராஜாஜியும் இதையறிந்து அவர்கள் இருவருக்கும் ஒரு நிபந்தனை விதித்தார்கள். அதாவது இருவரும் ஐந்து வருடங்களுக்கு ஒருவரை ஒருவர் சந்திக்கவோ கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளவோபடாது. இந்த நிபந்தனையை அவர்கள் சரிவர நிறைவேற்றிய பின் இருவருக்கும் திருமணம் நடந்தது.

காந்திஜிக்கும் ராஜாஜிக்கும் ஏற்பட்ட இந்த நெருங்கிய பிணைப்பு வெகுகாலமாக இறுகி வளர்ந்தது. ஆனல் ஒரேயொரு விஷயத்தில் இருவருக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு காங்கிரஸிலிருந்து ராஜிஞமாச் செய்ய வேண்டியும் வந்தது பின்னுக்கு வருவதை முன்கூட்டிய அறிவதில் ராஜாஜிக்கு இணையானவர்கள் எவருமில்லைஎன்று சொல்லலாம். பிரிட்டிஷார் இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கப் போகும் சமயத்தில் முஸ்லிம்லீக் தலைவர் ஜின்ன விடாப்பிடியாக பாகிஸ்தான் வேண்டுமென்று கோரியதும் அதனல் அவர் இடைக்கால சுதந்திர அரசாங்கத்தில் பங்குபற்ற மறுத்ததும் நாட்டில் பெரிய குழப்பமான நிலையை ஏற்படுத்தியிருந்தன. காந்திஜியோ என்ன விதப்பட்டும் இந்துக்களும் முஸ்லிம்களும் சகோதரர்கள் போல வாழ வேண்டுமென்றும் இந்தியாவைப் பிரிக்கப்படாதென்றும் விரும்பினர். இந்தச் சமயத்தில்தான் ராஜாஜி ஆங்கிலத்தில் 'சுவேய் அவுட்' (குழப்பத்திலிருந்து தப்புவதற்கு வழி) என்ற நூலை எழுதி வெளியிட்டார். அதில் அவர்

## திருமலை துறைமுக தொழிலாளர் 12-ம் திகதி குதிக்கிறார்கள்

— நமது நிருபர் எஸ். நவரத்தினம் —

திருகோணமலை, திங்கள்

திருகோணமலை துறைமுக ஊழியர்கள் இம்மாதம்12-ம் திகதி முதல்வேலைநிறுத்தத்தில்குதிக்க முடிவுசெய்துள்ளனர்.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கம் சோஷலிசதுறைமுக தொழிலாளர் சங்கம், சுதந்திரத் தொழிலாளர்சங்கம் இலங்கை தொழிலாளர் கழகம் ஆசியவற்றின் கூட்டு முன்னணி இம்மாதம் 12-ம் திகதி வேலை நிறுத்தத்தை மேற்கொள்வதென்றுமுடிவு செய்துள்ளது. இந்தச் சங்கங்களுடன் தேசிய தொழிலாளர் சங்கம், ஐக்கிய

இம்மாதம்3-ம் திகதி திருமலைதுறைமுகத் தொழிலாளர் நடாத்திய அடையாள வேலைநிறுத்தத்தில் 2000 ஊழியர்கள் கலந்தகொண்டனர். இந்த அடையாள வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்ளாத தேசிய தொழிலாளர் சங்கமும், ஐக்கிய துறைமுக தொழிலாளர் சங்கமும் ஐக்கிய கூட்டுத்தாபன தொழிலாளர் சங்கமும் 12ம்திகதி வேலைநிறுத்தத்தில் கலந்துகொள்வதென முடிவுசெய்துள்ளன.

### கொழும்பு துறைமுக

## போட்டிமுடிவுகள்

கோட்டை, திங்.

கொழும்பு விவேகானந்த சபையால் நடாத்தப்பெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவுப் பேச்சுவன்மைப் போட்டியின் இறுதித் தேர்வில் கீழ்க்காணும் பாடசாலை மாணவர்கள் பரிசில் பெற்றுள்ளார்கள். மேற்பிரிவில் முதலாம், இரண்டாம் இடத்தைப் பெற்றவர்களுக்கும் மத்திய பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றவர்க்கும் தங்கப்பதக்கங்கள் வழங்கப்பட்டன. ஏனையோருக்கு புத்தகங்கள் பரிசில்களாக வழங்கப்பட்டன. இறுதித் தேர்வில் கலந்து பரிசில்கள் பெறத்தவறியவர்கள் யாவருக்கும் ஆறுதல் பரிசில்கள் வழங்கப்பட்டன. அத்துடன் 25-10-69 இல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சி உட்பட அரசியல் கட்சி களின் கட்டுப்பாட்டில்தான் இங்குள்ள பல தொழிற் சங்கங்களும் இயங்குகின்றன. இதை யாரும் மறுப்பதற்கோ மறைப்பதற்கோ இல்லை. பல்கலைக்கழக மாணவர் சங்கங்கள் இயக்கங்களிலும் கட்சி அரசியல் இடம்பிடிக்காமலில்லை- தேர்தல்சமயங்களில் மாணவர்களின் உதவியையும் ஒத்துழைப்பையையும் அரசியல் வாதிகள் நாடுவதும் தேடுவதும் நாடறிந்த விஷயம். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் விரிவுரையாளர்கள் முதல் சாதாரணப்பள்ளிக்கூட ஆசிரியர்கள்வரை நேரடியாகவோ மறைமுகமாகவோ கட்சி அரசியலில் ஈடுபடுவதும் அரசியல் வாதிகளின் உதவியைப் பெறுவதும் பகிரங்க இரகசியம். அரசியல் நோக்கத்துக்காக ஆசிரியர்களையும் மாணவர்களையும் தங்கள் பக்கம் இழுத்துக்கொள்வதில்லையென்று அரசியல்வாதிகள் முற்றாக மறுத்து விடுவதென்று உறுதி செய்துகொண்டால் அரசியலைத் தெரிந்து வைத்திருப்பதுடன் நின்று விடுவதென்றும் கட்சி அரசியல் சக்திக்குள் கால் வைப்பதில்லையென்று ஆசிரியர்களும் மாணவர்களும் சங்கற்பம் செய்து கொண்டால்'நாட்டை பிடித்துள்ளகேடு பெருமளவு நீங்கிவிடும். அரிசி முதல் ஆட்சிமன்றம் வரை சகலரும் அரசியலில் கலந்திருப்பதால் எப்படி ஒதுங்கியிருக்க முடியும் என்று கேட்கலாம். நாளைய சந்ததியினரான களுக்கும் வேலைநிறுத்தம் செய்யத் தீர்மானித்துள்ள ஊழியர்களுக்கும் குறைகளில்லாமலில்லை. இந்தக் குறைகளுக்கு நிவர்த்திக்கான ஒரே சமயத்தை தான் தேடிப்பிடிக்க வேண்டுமா? இந்த வேலைநிறுத்தங்கள் அரசாங்கத்துக்கும் தொழிற் சங்கங்களுக்கும் அரசியல் கட்சிகளுக்குமிடையிலுள்ள ஒரு பலப்பரீட்சையாக இருக்கலாம் ஆனால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் சாதாரண பொதுமக்கள் என்பதை மறந்துவிடக் கூடாது.

தொழிலாளரின் சம்பள உயர்வு வாழ்க்கைச் செலவு உயர்வு வேலையற்றோர் அதிகரிப்பு, மாணவர் கிளர்ச்சி வேலைநிறுத்தம் ஆகியவை ஒரு கட்சியின் பிரச்னையல்ல நாட்டைப் பொறுத்ததே தேசியப் பிரச்னை எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் மீண்டும் மீண்டும் தலைதூக்கி தொல்லைதரும் பிரச்னைகள் இவை. இதற்கு இப்போதே தேசிய ரீதியில் ஒரு தீர்வு காண முனைவதே சிறந்தது. சகல தொழிற்சங்கத் தலைவர்களையும் அரசியல் கட்சித் தலைவர்களையும் அமைச்சர்களையும் அழைத்து ஒரு மகாநாடு கூட்டி இந்தத் தேசியப் பிரச்னைகளுக்குத் தேசிய ரீதியில் முடிவுகாண பிரதமர் முன்வருவது நல்லது. மகாநாடு வெற்றியளிக்காவிட்டாலும் அந்த முயற்சியே பிரதமர் மேற்கொண்டு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உதவியளிப்பதர்க இருக்குமென்று நம்பலாம்.

# "தீவுப்பகுதி பஸ் கட்டணம் குறைக்கப்பட வேண்டும்"

ஊரதீவு, திங்கள்

தீவுப்பகுதி பஸ்போக்குவரத்துக் கட்டணத்தைக் குறைக்குமாறு கோரி தேசியமயசேவைகள் அமைச்சர் திரு. வி.ஏ.சுகததாஸாவுக்கு ஊரதீவு இளந் தமிழர் மன்றம் மகஜர் ஒன்றை அனுப்பவைத்துள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு உள்ள தூரமே யாழ்ப்பாணத்திலிருந்து புங்குடுதீவுக்குள்ள தூரமாயிருந்தும் இரண்டு இடங்களுக்குமுள்ள கட்டணத்தில் நாற்பது சதம் வித்தியாசமிருப்பதாகவும் இதனால் புங்குடுதீவு மக்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாகவு, கட்டண உயர்வு காரணமாகப் புங்குடுதீவு மக்கள் தனியார் வாகனங்களைப் பாவிக்கின்றனர் என்றும், கட்டணம் குறைக்கப்பட்டு பஸ்கள் ஒழுங்காகச் சேவைக்கு விடப்படுமாயின் தனியார் வாகனங்களை விடுத்து, மக்கள் பஸ் வண்டியையே பாவிப்பார்கள் என்றும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரதிகள் வடபிராந்திய இ.போ.ச. முகாமையாளருக்கும் தீவுப்பகுதி எம்.பி.க்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கோட்டை, திங்கள்

டாக்டர் பி. ஏ. பெரேரா கமிட்டி, தனது அறிக்கையைச் சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்காவிடம் கையளித்தது. சுகாதார இலாகாவின் வைத்தியப்பகுதிகளில் கடமையாற்றும் சிறு ஊழியர்கள் வேலை நேரம், சேவை நிபந்தனை ஆகியன பற்றி இக்கமிட்டி ஆராய்ந்து இவ்வறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது.

இப்பத்திரிகை ஈழநாடுலிமிட்டெட்ஸ்தாபனத்தா ரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 9ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

என்று வளர்த்துக்கொண்டே செல்லவேண்டும். இது ஹோமியோபதி வைத்திய முறை ஹோமியோபதி என்றுல்சௌம்யபதி (மென்மையான முறை) என்று பெயர் ஆகையால் நம்நாடு தன்னிச்சையாக ராணுவம் வைத்துக்கொள்வதில்லை என்று முடிவுசெய்வதால் நமக்கு பெரும் நஷ்டம் ஒன்றும் ஏற்

## ஆசிரியையின் 33 வருட சேவை

சுன்னாகம் மயிலணி சைவ வித்தியாசாலை உதவி ஆசிரியை திருமதி ரூபேட் ஆரோக்கியம் இம்மாதம் 6ந் திகதி தமது பணியிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

கன்னியர்மடம் பாடசாலையில் 2 ஆண்டுகளும், சென் சாள்ஸ் பாடசாலையில் 5 ஆண்டுகளும் சேவையாற்றிய பின் மயிலணி சைவ வித்தியாசாலையில் 1936ம் ஆண்டு உதவி ஆசிரியராகச் சேர்ந்துஇவர்33ஆண்டுகளாகத்தமது சேவையை மிகத் திறம்படச் செய்துள்ளார். பாலர்வகுப்புப் பிள்ளைகளைப் பயிற்றுவிப்பதில் மிகவும் கைதேர்ந்தவர். நல்லாசிரியையாகத் திகழ்ந்த இவரிடம் கற்ற மாணவ மாணவிகள் பலர்இன்றுநல்லஉத்தியோகங்களில் சிறந்து விளங்குகின்றனர் இம்மாணவர்களின் பிள்ளைகளுக்கும் கற்பிக்கும் வாய்ப்பும் ஏற்பட்டது குறித்து இவ்வாசிரியை மிக்க மகிழ்ச்சியடைகிறார்.

'தக்கார் தகவிலரை அவர் எச்சத்தால் அறியப்படும்' இதற்கமைய இவரின் பிள்ளைகள் கல்வி நலம் பெற்றுச் சிறந்த உத்தியோகப் பதவிகள் வகிக்கின்றனர். இதை இவரின் சிறந்த சேவையின் பிரதிபலிப்பென்றே கூறலாம்.

இவரின் சேவை நலத்தைப் பாராட்டி ஆசிரியர்களும், பிள்ளைகளும், பெற்றோர்களும் பாடசாலையில் பாராட்டு விழாவொன்றை நடத்தினர்.

—மாணவன்

### தசாஹ அழைப்பு

புங்குடுதீவு மேற்கு சிவஸ்ரீ தி. சதாசிவக் குருக்கள் அவர்கள் 1-12-69-ல் சிவபதமடைந்ததை முன்னிட்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காக 10-12-69 முதல் தொடர்ந்து நான்கு நாட்களுக்கு தசாஹம் முதலிய கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இங்ஙனம், திருமதி சதாசிவக் குருக்கள், ச. சிவசுப்பிரமணியக் குருக்கள், ச. பாலகிருஷ்ண குருக்கள், புங்குடுதீவு. 1611

[illegible] ஆசிரியர் சங்கம் கூட்டு முன்னணி இம்மாதம் 12-ம் திகதி வேலை நிறுத்தத்தை மேற்கொள்வதென்றுமுடிவு செய்துள்ளது. இந்தச் சங்கங்களுடன் தேசிய தொழிலாளர் சங்கம், ஐக்கிய துறைமுக தொழிலாளர் சங்கம் ஐக்கிய கூட்டுத்தாபன தொழிலாளர் சங்கமும் இந்த வேலைநிறுத்தத்தில் கலந்துகொள்ளப்போவதாக அறிவித்துள்ளன,

துறைமுகத் தொழிலாளருக்கு மாதச் சம்பளம், மேலதிக நேரப் பாக்கிப் பணம், வேலையாள் நஷ்டஈட்டுச்சட்டத்தை திருத்தி அமைத்தல் ஆகிய முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து இவ்வேலைநிறுத்தத்தைமேற்கொள்கின்றன.

[illegible] மும் 12ம்திகதி வேலைநிறுத்தத்தில் கலந்துகொள்வதென முடிவுசெய்துள்ளன.

### கொழும்பு துறைமுக தொழிலாளர்

இம்மாதம் 10-ம் திகதி நடக்கவிருந்த கொழும்பு துறைமுக ஊழியர் உத்தேச வேலைநிறுத்தம் இம்மாதம் 12ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தொழிற்சங்க பிரமுகர் ஒருவர்தெரிவித்தார். கொழும்பு துறைமுக ஊழியரின் 7 தொழிற்சங்க பிரதிநிதிகள் கூட்டுத்தாபன தலைவருடன் தமதுகோரிக்கைகள்குறித்து பேச்சுவார்த்தை நடாத்தினார்கள்.

# வித்யாலங்கார மாணவர் திரும்பிச் சென்றனர்

கோட்டை, திங்.

தேசிய உயர்கல்விச் சபை அலுவலகத்தின் முன் ஆர்ப்பாட்டம் செய்வதற்காகச் சென்ற வித்தியலங்கார பல்கலைக்கழக மாணவர்கள் இடையில் தமது எண்ணத்தைக் கைவிட்டுப் பல்கலைக்கழகத்துக்குத் திரும்பினார்கள்.

புதிய களனி பாலத்துக் கருகில் பொலிஸார் இவர்களை மறித்து, பல்கலைக் கழகத்துக்குத் திரும்பிச் செல்லுமாறு கோரினர்.

பல்கலைக்கழக மாணவர் தலைவர்கள் கூடி யோசனை செய்த பின்னர் பொலிஸார் கோரிக்கையை ஏற்றுக் கொண்டனர்

6 பஸ்களும் திரும்பி பல்கலைக்கழகம் சென்றடைந்தன.

# 'பள்ளிகளில் விவசாயபண்ணைகளை நிறுவுவதன் நோக்கம்'

திருகோணமலை, திங்கள்

''மாணவர்கள் - கல்வியில் மட்டுமல்லாது விவசாயத்திலும் நாட்டங்கொள்ள வேண்டும் என்பதற்காகவே சகலபாடசாலைகளிலும் விவசாயத்தையொரு பாடமாக போதிப்பபோடு விவசாயப் பண்ணைகளையும் அரசாங்கம் நிறுவிவருகின்றது''

திருமலை அரசாங்க அதிபர் திரு. சோமபால குணதீரா கந்தளாய் மகாவித்தியாலயத்தில் விவசாயப்பண்ணையொன்றைத்திறந்துவைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், இலங்கையில் சுமார் 50 பாடசாலைகளில் விவசாயப்பண்ணை நிறுவப்பட்டிருக்கின்றதென்றும், திருமலை மாவட்டத்தில் முதல் முதல் இப்பாடசாலையிலேயே விவசாயப்பண்ணை திறக்கப்படுகின்றதென்றும், சிங்களப்பகுதிகளில் இங்குள்ள மாணவர்கள் ஒரு முன்மாதிரியானவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவரைத் தொடர்ந்து உரையாற்றிய திருமலை மாவட்ட கல்வி அதிகாரி திரு. சந்திரசேகரம் பேசுகையில், புத்தகப் படிப்போடு மாணவர்கள் நின்றுவிடாது விவசாயத்திலும், கைத்தொழிலும் முன்னேற வேண்டுமென்றும், அதற்கு முன்மாதிரியாகவேஇப்படிப்பட்ட பண்ணைகள் திறக்கப்படுகின்றதென்றும், கந்தளாய் மகாவித்தியாலயத்தில் விரைவில் ஒருவிஞ்ஞான ஆய்வுகூடமும் விவசாய ஆய்வுகூடமும் நிறுவப்படும் என்றும் குறிப்பிட்டார்.

இததிறப்புவிழா வைபவத்தில் திருமலை காரியாதிகாரி வட்டார அதிகாரி, கந்தளாய் கிராமசேவகர் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

### ஆங்கில வகுப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

ஊர்காவற்றுறை வட்டார வித்தியாதரிசியால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த ஆங்கில வகுப்பு புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் இம்மாதம் 6-ம்திகதி மகாவித்தியாலயஅதிபர் திரு. இ.சச்சிதானந்தத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

32 ஆசிரியர்கள் கலந்துகொள்ளும் இவ்வகுப்பை திரு. ஏ. ஐ. குணநாயகம் நடாத்திவருகின்றார்.

[illegible] ளாக வழங்கப்பட்டன. இறுதித் தேர்வில் கலந்து பரிசில்கள் பெறத்தவறியவர்கள் யாவருக்கும் ஆறுதல் பரிசில்கள் வழங்கப்பட்டன. அத்துடன் 25-10-69 இல் நடைபெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் நினைவுக் கட்டுரைப் போட்டியில் மேற்பிரிவிலும், கீழ்ப்பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கட்கும் புத்தகங்கள் பரிசில்களாக வழங்கப்பட்டன

கீழ்ப்பிரிவு: பொ தபோனி தி, வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாசாலை; சா சந்திரகுமாரி, வவனியா சி சி த க பாடசாலை; வி ஜெகதீசன், நாவலப்பிட்டி கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயம்.

மத்திய பிரிவு: ந சங்கரவடிவு, கொ/தட்டாதெரு கணபதி வித்தியாலயம்; அ சோமசுந்தரியா/தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாசாலை, க கிருஷ்ணமூர்த்தி, கொ/தட்டாதெரு கணபதி வித்தியாலயம்.

மேற்பிரிவு: க லலிதகுமார் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி; கு சிவசோதி, மட்டக்களப்பு வின்சர் மகளிர் கல்லூரி; சி தங்கமலர், யா சரசாலை சாஸ்வதி வித்தியாசாலை

### கட்டுரைப் போட்டி

கீழ்ப்பிரிவு: இ பரமேஸ்வரி, பதுளை தமிழ் மகளிர் கனிஷ்ட வித்தியாலயம்; க சரோஜா, புங்குடுதீவு இறுப்பிட்டி சித்திவிநாயகர் வித்தியாசாலை; வெ பிரேமாதேவி கொ/கொட்டாஞ்சேனை விவேகானந்த மகா வித்தியாலயம்.

மேற்பிரிவு; ஸ்ரீ மனோகரன், நாவலப்பிட்டி கதிரேசன் குமார மகா வித்தியாலயம், ந இந்திரா, கொ. கொட்டாஞ்சேனை விவேகானந்த மகா வித்தியாலயம்; சு வித்தியாராஜினி, அளம்பில் செம்மலை சைவப் பாடசாலை. ......

### பாராட்டு

மல்லாகம், திங்கள்

அகில இலங்கை அரசினர் பாடசாலைத்தமிழ் ஆசிரியர் சங்க வலி-வடக்கு கிளையினரால் தலைமையாசிரியர் திரு இ. தாமோதரம்பிள்ளையின் சேவைநலம் குறித்து இன்று காலை 10 மணிக்கு மாவிட்டபுரம் கிராம முன்னேற்றச் சங்கமண்டபத்தில் பாராட்டு விழா நடாத்தப்பட்டது.

காங்கேசன்துறை வட்டார வித்தியாதிகாரி திரு காசோமசுந்தரம், கோப்பாய் வட்டார வித்தியாதிகாரி திரு. வே. சண்முகநாதன், திரு. வே. கந்தையா, திரு. த சண்முகதாசன், திருமதி அகனகசபை ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

கொண்டே இருப்பார்.

சேலம் நகரசபைத் தலைவராயிருக்கும்போதே பலரும் அதிர்ச்சியுறும் வண்ணம் புரட்சிகரமான சமூக மாற்றங்களைச் செய்தார். மூக்கியமாக தீண்டாமை ஒழிப்புக்கும் மதுவிலக்குக்கும் அவர் செய்த சேவைகள் பாராட்டத்தக்கன. ஹரிஜனங்களின் தாழ்ந்த நிலையை மேன்மையுறச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் அவர் எடுத்த நடவடிக்கைகளை வைதீகர்கள் பலமாக எதிர்த்த போதிலும், ராஜாஜி தமது வாக்குவன்மையாலும் கூரிய புத்தியினாலும் அவர்களைச் சமாதானப்படுத்தி தமது காரியத்தை முடித்துக் கொண்டார்.

மகாத்மாகாந்தி தென்னாபிரிக்காவில் நடத்திய போராட்டம் ராஜாஜியை மிகவும் வசீகரித்தது. அம்மகான் இந்தியா திரும்பி சுதந்திரப் போருக்குஆயத்தமானதும் அவருடைய சீடனாகி காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து உழைத்தார். மகாத்மாகாந்தி உப்பு சத்தியாக்கிரகம் செய்து தண்டியாத்திரை போனபோது, ராஜாஜி திருச்சியிலிருந்து புறப்பட்டு பதினைந்து நாட்கள் நடந்து சென்று வேதாரண்யத்தில் அரசாங்கத்தை மீறி உப்பு அள்ளி பின்னர் அதற்காக சிறை சென்றது தமிழ்நாட்டு மக்களால் மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சியாகும்.

ராஜாஜி திருச்செங்கோட்டில் காந்தி ஆச்சிரமம் அமைத்து தொண்டு செய்த போது இந்திப் பிரசாரம் சம்பந்தமாக தென்னாட்டுக்கு வந்திருந்த காந்திஜியின் புதல்வர் தேவதாஸ் தென்றும் விரும்பினார். இந்தச் சமயத்தில்தான் ராஜாஜி ஆங்கிலத்தில் 'சுவேய் அவுட்' (குழப்பத்திலிருந்து தப்புவதற்கு வழி) என்ற நூலை எழுதி வெளியிட்டார். அதில் அவர் மிகுந்த துணிச்சலுடன் ஜின்னாவை எப்படியாவது சமாளிப்படுத்தியாக வேண்டுமென்றும் பாகிஸ்தான் கொடுத்து விடுவதே தப்புவதற்கு வழி என்றும் மறைமுகமாகக் கூறியிருந்தார்.


அதற்குப்பின் நடந்த சம்பவங்கள் ராஜாஜி நினைத்ததே சரி என்பதை நிரூபித்துவிட்டன.

வழிப்போக்கன்

### ஆசிரிய லட்சணம்

உடுவில், திங்கள்

'விசுவாசம், தருமம்' இவற்றை ஒரு ஆசிரியர் கடைப்பிடித்தல் அவசியம். இத்தன்மைகள் கொண்ட ஒரு ஆசிரியரின் கீழ் வளரும் ஒரு மாணவன் அல்லது மாணவி வாழ்க்கையில் செம்மை பெறுவது திண்ணம். தாம் கற்பித்த எத்தனை மாணவர் பட்டம்பதவிகள் பெற்றுள்ளனர் என்று கணக்கிட்டுப் பெருமைப்படுவதிலும் பார்க்க எத்தனை பேர் தருமத்தைக் கடைப்பிடித்து வாழ்கின்றனர் என்பதைக் கணித்து பெருமைப் படுவதே ஆசிரியருக்கு அழகு என நவாலி மகாவித்தியாலயத்தில் ஆசிரியராக 42 வருடங்கள் கடமையாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு ரி தங்கராசாமேற்படி வித்தியாலய மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் தமக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடைக்குநன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறினார்



நாவற்குழியைச் சேர்ந்த டாக்டர் வே. திருஞானசம்பந்தருக்கும் (யாழ். திருஞானம்ஸ் அன் கோ ஓடிற்றர்ஸ் உரிமையாளர்) சங்கரத்தையைச் சேர்ந்த டாக்டர் சி செல்வத்துரையின் மகள் செல்வி மனோன்மணிக்கும் நல்லூர் சிவன்கோவிலில் திருமணம் நடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org